
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=
# ஈழநாடு
Eelanadu
வார மலர்
Email : news@eelanadu.lk
மலர் : 05
23.06.2024 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 175
பக்கங்கள் : 16




# மக்களுக்கு உரிமைகள் இதுவே எனது நோக்கம்!

## மட்டக்களப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

- மட்டு. திருமலையில் மீள மகாவலி அபிவிருத்தி
- பிரதான பொருளாதார மையமாக திருமலை
- வெருகலாறு, அறுகம் குடாவில் சுற்றுலா விருத்தி



மட்டக்களப்பு, ஜூன் 23

**நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே எனது பிரதான நோக்கம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன், திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை மட்டக்களப்புக்கு சென்றார். அங்கு, புதிய மாவட்ட செயலகத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து காணி உறுதிகள், ஆசிரியர் நியமனங்கள் வழங்கி வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம்.

15



## 27,595 பேருக்கு காணி உறுதிகள் 252 பேருக்கு ஆசிரியர் நியமனம்

### வழங்கினார் ஜனாதிபதி ரணில்

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த 27 ஆயிரத்து 595 குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வை நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி தொடக்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உரிமையற்ற 27 ஆயிரத்து 595 குடும்பங்களுக்கு உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில், 2 ஆயிரத்து 610 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட் டுள்ளன. ஏனையோருக்கு விரைவில்

15

## ஊடகர்களுக்கு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு, ஜூன்23

மட்டக்களப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற நிகழ்வுகளில் செய்தி சேகரிப்பதற்கு அந்த மாவட்டத்தின் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி

15

## வெளியக பொறிமுறையை மீண்டும் நிராகரித்தது அரசு

### ஒரு தலைப்பட்ச ஆணைகள் பயனற்றவையாம்




கொழும்பு, ஜூன் 23

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மூலம் உருவாக்கப்பட்ட ஆதாரங்களை சேகரிக்கும் வெளியக பொறிமுறையை இலங்கை அரசு மீண்டும் நிராகரித்துள்ளது.

அத்துடன், மனித உரிமைகள் பேரவையின் பணி இறையாண்மை - சமத்துவம் - பிரதேச ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்தல் - தலையீடு செய்யாமை போன்ற கோட்பாடுகளால் வழிநடத்தப்பட வேண்டும். ஒரு தலைப்பட்சமான

15

## சீயோன் தேவாலய புனரமைப்பு துரித நடவடிக்கைக்கு உத்தரவு

மட்டக்களப்பு, ஜூன் 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சேதமடைந்த சீயோன் தேவாலயத்தின் புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த ஜனாதிபதி ரணில் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்புக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீயோன் தேவாலயத்துக்கும் சென்றார். அங்கு புனரமைப்பு பணிகளை பார்வையிட்ட அவர், தேவாலயத்தின் பிரதான போதகர் ரொஷான் மகேசனுடன் கலந்துரையாடினார்.

தேவாலயத்தின் புனரமைப்பு பணிகள் இதுவரை ஏன் நிறைவடையவில்லை என்பது தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அது குறித்து உட னடியாக ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணித்தார்.

15

## சரத் பொன்சேகாவுக்கு விரைவில் மார்ஷல் பதவி?

கொழும்பு, ஜூன் 23

பாதுகாப்புத் துறையில் உலகின் உச்ச பதவியான ‘மார்ஷல்’ பதவி முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பியான சரத் பொன்சேகா அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஆறு நட்சத்திர ஜெனரல்

15

## பெரமுனவா, நாங்களா உங்களுக்கு வேண்டும்?

### ரணிலிடம் லான்சா அணி கேள்வி

கொழும்பு, ஜூன் 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவு தேவையா அல்லது எங்களின் ஆதரவு தேவையா என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்க வேண்டும் என்று நிமல் லான்சா அணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

15

## இனப் பிரச்னை தீர்வுக்காக சகலரும் ஒன்றிணைவோம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

மட்டக்களப்பு, ஜூன் 23

“இனப் பிரச்னையை இனியும் இழுத்தடிக்க வேண்டிய அவசியமில்லை. அதனை விரைவாக தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்”, - இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு சென்ற ஜனாதிபதி

15

## புதிய சட்டமா அதிபராக பரீந்த ரணசிங்க பரிந்துரை?

கொழும்பு, ஜூன் 23

புதிய சட்டமா அதிபராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரீந்த ரணசிங்க நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலம் அடுத்த வாரம் நிறைவுபெறுகின்றது. இந்த நிலையில், சஞ்சய் ராஜரத்தினத்துக்கு 6 மாத சேவை நீடிப்பு வழங்குமாறு அரசமைப்பு

15

## கட்சிக்கு எதிரானவருக்கு நாம் நேரம் கொடுப்பதா?

### பொன்சேகா குறித்து கிரியெல்ல கேள்வி

கொழும்பு, ஜூன் 23

கட்சி மீது வழக்கு தொடுத்து - தலைமையை விமர்சிக்கும் ஒருவருக்கு பாராளுமன்றத்தில் பேசுவதற்கு நாங்கள் எவ்வாறு நேரம் வழங்க முடியும் - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல.

தனது கருத்தை பாராளுமன்றில்

15

## தேர்தலில் ரணிலுக்கே ஆதரவு பிள்ளையான் கட்சி அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமது கட்சி ஆதரவளிக்கும் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவித்துள்ளது.

மட்டக்களப்புக்கு நேற்று சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி யின் தலைமை பணிமனைக்கும்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கல்கியின் 'யாழ்ப்பாண ஞாபகங்கள்'

- அனந்த பாலகிட்ணர்.



இராமசுவாமி கிருஷ்ணமூர்த்தி, பின்னாளில் 'கல்கி' எனப் புனை பெயரால் அழைக்கப்பட்டவர். தமிழ் பத்திரிகை உலகில் ஆனந்த விகடன் சஞ்சிகையில் பிரவேசித்து, பின்னர் கல்கி சஞ்சிகையில் தனது பத்திரிகைத்துறைப் பயணத்தை தொடர்ந்தார். 1938ஆம் ஆண்டு ஆனந்த விகடன் பத்திரிகையாளராக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார் கல்கி. அப்போது அவர் யாழ்ப்பாணத்தில் பயணித்தது உட்பட, 'இலங்கைப் பயணம்' என்ற தலைப்பில் தமது இலங்கை அனுபவத்தை ஆனந்த விகடனில் எழுதியிருந்தார். அக்கட்டுரையை இங்கே 'ஈழநாடு' பத்திரிகையில் தருகின்றேன்.

இலங்கைப் பயணத்தை ஆரம்பிக்க நினைத்த நாள் முதல் யாழ்ப்பாணம் என்ற நாமமே என் மனதில் நிழலாடியபடி இருந்தது. யாழ்ப்பாணத்தைப் போய் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் நீண்ட காலமாகவே இருந்தது. அந்த பிரதேசத்தை ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகவே நான் கருதி வந்தேன். தமிழறிஞர் ஆறுமுக நாவலரை தமிழகத்துக்கு அறிமுகப்படுத்திய நகரமல்லவா யாழ்ப்பாணம்?

எங்கள் கிராமத்து சந்தைக்கு முன்பொருநாள் நானும் எனது ஆசிரியரும் போயிருந்தோம். சந்தையின் ஒரு மூலையில் ஒரு கூட்டம் காணப்பட்டது. அக் கூட்டத்தின் மத்தியில் ஒரு கிறிஸ் தவ பாதிரியார் நின்றிருந்தார். அவர் அங்கே மதப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அவர் தமது மதத்தை உயர்வாகப் பேசி, துண்டுப்பிரசுரங்களை அங்கு நின்றோர் மத்தியில் வழங்கியபடி நின்றார். இச்சம்பவம் எனது ஆசிரியரின் மனதை வெகுவாக பாதித்து விட்டிருந்தது. கிறிஸ்தவ பாதிரியாரின் பிரசாரத்தை முறியடிக்கவேண்டுமென அவர் நினைத்தார். இதற்காக சென்னையிலுள்ள பிரபல புத்தக கடையில் அவர் தேர்ந் தெடுத்த நூல்கள் யாவும் ஆறுமுக நாவலர் எழுதிய நூல்களாகும்.

அவற்றில் ஒரு பகுதி பால பாடம் 1, 2, 3 ஆகியவையாகும். இன்னொரு பகுதி இந்து மதத்தின் பெருமைகளை விளக்கியிருந்தது.

பாலபாடங்களை படித்தபோது தமிழை எவ்வளவு சரளமாக கையாளலாம் என்பதை அறிந்து கொண்டேன். தமிழில் வசன நடை எழுதி வழிகாட்டிய பெரியார்களில் ஆறுமுக நாவலர் முதன்மையானவர் என்பது பிற்காலத்தில் தெரிய வந்தது.

எனக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான உறவு மனதளவில் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வந்தது. இந்த உறவு பலமடைய மூன்று காரணிகள் இருந்தன. ஒன்று தேசப்பற்று, இரண்டாவது சமயப் பற்று, மூன்றாவது தமிழபிமானம். இந்த மூன்று காரணிகளினதும் பிரதிநிதிகளாக எனக்கு நண்பர்கள் மூவர் இருந்த னர். சிவகுருநாதன், அம்பிகை பாகன், சிவபாதசுந்தரம் ஆகி யோரே அம்மூவருமாவர். இந்த மூவரதும் பெயர்கள் அழகானவை. ஆனால், யாழ்பாணத்தவர்களிடம் அழகான அதிசயிக்கக்கூடிய விட யங்கள் நிறையவே இருக்கின்றன. சிவகுருநாதன் பாரத மாதாவின் சேவைக்காக யாழ்ப்பாணத்தவர் வழங்கிய நன்கொடை. காந்தியடிகளின் சத்தியாக்கிரக ஆச்சிரமத்தில் பயிற்சிபெற்ற காலத்திலிருந்து தமிழ் நாட்டில் பல்வேறு துறைகளிலும் தேசத்தொண்டு புரிந்துவருகின்றார். இந்த உயர்வான மனிதரது பிறப்பிடமான யாழ்ப்பாணத்தை பார்க்க வேண்டுமென்ற அவா என்னிடம் நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

அம்பிகைபாகன் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது அவரை ஒருநாள் இராமகிருஷ்ண மடத்தில் சந்தித்தேன். சமயப் பற்றும் சமூகத் தொண்டில் ஆர்வ மும் அவரிடமிருந்தன. யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவர்.

மூன்றாவது நபர் சிவபாதசுந்தரம். இவர் தமிழகம் வந்து, ஆனந்த விகடன் அலுவலகத்தில் இலங்கையைப் பற்றி விபரித்த நாளிலிருந்தே எனக்கு இலங்கை செல்லவேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது. சிவபாதசுந்தரம் ஆனந்த விகடன் கட்டுரைகளை வியந்து பேசினார். " யாழ்ப்பாணத்தவர் ஒருவர் ஆனந்த விகடன் கட்டுரைகளை பாராட்டுவதென்றால் அது எமக்குப் பெருமை" என்று கூறினேன்.

கொழும்பில் யாழ்ப்பாண பிரமுகர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். கொழும்பில் இடம்பெற்ற கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் அன்று காங்கேசன் துறையை அரசாங்க சபையில் பிரதிநிதித்துவப்படுத்திய எஸ். நடேச பிள்ளை.

கொழும்பில் எம்மைப் பார்க்க யாழ்ப்பாண இளைஞர்கள் பலர் வந்திருந்தனர். அவர்கள் அன்று ஆனந்த விகடனில் வெளியான கதைகள், கட்டுரைகள் பற்றி பேசினார்கள். நான் எழுதிய 'கள்வனின் காதலி'யில் வந்திருந்த காட்சிகள் மற்றும் தகவல்களை தாம் எவ் வாறு ரசித்தோம் என்று கூறி னார்கள்.

எனவே என்னைச்சந்தித்து உரையாடி மகிழ்ந்த யாழ்ப்பாணத்தவர்களை கண்டபோது, யாழ்ப்பாண மண்ணை எவ்வாறாயினும் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் எனக்குள் மேலும் அதிகரித்தது.

இறுதியாக ஒருநாள் காலையில் யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தை கொழும்பிலிருந்து ஆரம்பித்தோம். ஏறக்குறைய பாதி வழியில் அநுராதபுரம் இருக்கின்றது. இலங்கையில் ஒரு புராதனமான இடம் அநுராதபுரம். கவிச் சக்கரவர்த்தி கம்பன் இலங்காபுரியை வர்ணித்திருப்பது போலவே ஒரு வரலாற்று ஆசிரிய ரும் அநுராதபுரம் நகரை வர்ணித்துள்ளார். இங்கே 'தாகபா' அதாவது, விகாரைகள் இருக்கின்றன. இந்த விகாரைகளிலுள்ள செங்கற்களை எடுத்தால் ஒரு சிறிய பட்டணத்தையே கட்டிவிடலாம்.

அநுராதபுரத்தின் மற்றுமொரு வரலாற்று அதிசயம் அங்குள்ள புராதன அரசமரமாகும். இந்த மரம் இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு மேல் பழமை வாயந்தது. புத்த பகவான் ஞானோதயம் பெற்ற போதி மரத்தின் சிறு கிளையை அவரது மகன் மஹிந்தவும் மகள் சங்கமித்தையும் எடுத்து வந்து அநுராதபுரத்தில் நாட்டினர். இன்று அந்த புனித மரம் வெகு விசாலமாக பரந்து விரிந்து கிளை விட்டிருக்கின்றது.

அநுராதபுரத்திலிருந்து பிற்பகல் இரண்டு மணியளவில் கிளம்பி, ஏறத்தாள ஐந்து மணி நேரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தையடைந்தோம். அப்போது எனக்கு பூர்வ ஜன்ம ஞாபகம் வந்தது போன்ற பிரமை ஏற்பட்டது.

(தொடரும்)

# முருங்கனில் கோர விபத்து வயோதிபப் பெண் மரணம்

## 14 பேர் மருத்துவமனையில்



மன்னார், ஜூன் 23

ஹயஸ் வான் - மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார். 14 பேர் காயமடைந்தனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசைமாலைத் தாழ்வுப் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

கல்முனையிலிருந்து மன்னார் மறிச்சுக் கட்டி பிரதேசத்துக்கு குறித்த வாகனத்தில் வருகை தந்தவர்களின் வாகனமே இவ்வாறு மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த அனைவரும் முருங்கன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 7 பேர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களில் வயோதிபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வாகனத்தில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்த உறவினர்கள் எனத் தெரிய வருகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# யாழில் சர்வதேச யோகாதின சிறப்பு நிகழ்வு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்






யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நேற்று முன்தினம் காலை 7: 30 முதல் 8: 30 மணி வரை யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் எம். ஜெகூ, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன், இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் யோகா ஆர்வலர்கள், மாணவர்கள், யோகா பயிற்சியாளர்கள், பொது மக்கள் என 1200 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பங்கேற்பாளர்களுக்குத் தூதரகத்தினால் மேலங்கிகள், தொப்பிகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்திய அரசின் முன்மொழிவின்படி ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. (எ)

# மன்னாரில் நாய்கள், காகங்கள் மர்மமான முறையில் மரணம்!

மன்னார், ஜூன் 23

மன்னார் உப்புக்குளம் பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்கள், காகங்கள் தொடர்ச்சியாக மர்மமான முறையில் உயிரிழந்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக இவ்வாறு மரணங்கள் அதிகரித்து வருவதாகவும் மக்கள் கூறினர்.

மிகவும் ஆரோக்கியமாக அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டு கிரமமான முறையில் பராமரிக்கப்பட்டு வந்த நாய்கள் திடீரென இறப்பது வேதனையளிக்கிறது.

இந்த நாய்கள் வீட்டிலிருந்து வெளியில் சென்ற நிலையிலே இவ்வாறு உயிரிழப்பு இடம்பெற்று வருகின்றது.

இதுவரை 8 நாய்கள் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் மேலும் மூன்று நாய்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் குறித்த நாய்களுக்கு அப்பகுதியில் யாரோ நஞ்சு கலந்த உணவை வழங்கியிருக்கலாம் எனவும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் நாய்கள் மாத்திரமன்றி காகங்கள் மற்றும் கோழிகளும் உயிரிழந்ததாகத் தெரியவருகின்றது.

இச் சம்பவம் குறித்து உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நாய்களின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# 2025 முதல் சொத்து வரி நடைமுறைக்கு வரும்

கொழும்பு, ஜூன் 23

2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் பின்னர் சொத்து வரி நடைமுறைப் படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இந்த வரி மூலம் 90 வீதமான மக்கள் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார். கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## தவறிவிட்டது

இல.314/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மலிங்கம் ஆதித்தியன் ஆகிய எனது தே.அ.அட்டை( இல.200500700587 ), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ராஜா திரையரங்கில் நேற்று 22.06.2024 மதியம் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீராம் ஜுவல்லர்ஸ் (ராஜா திரையரங்கு முன்பாக) ஒப்படைத்துதவும் அல்லது 0772349933 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# மைத்திரியின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தது திருச்சபை

கொழும்பு, ஜூன் 23

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல தரப்பினர் வழங்கிய நிதி உதவி பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த குற்றச்சாட்டை இலங்கை கத்தோலிக்க திருச்சபை முற்றாக நிராகரித்துள்ளது.**

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே திருச்சபை 500 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளது என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிருசாந்த தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சமூக சேவை பிரிவான செத்சரன மூலம் இந்த நிதி உதவியை வழங்கியுள்ளோம். நாங்கள் செய்யும் உதவிகள் குறித்து எவருக்கும் தெரிவிப்பதில்லை எனவும் அவர் கூறினார். (எ)

# வவுனியா மருத்துவமனை வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம்

வவுனியா, ஜூன் 23

வவுனியா பொது மருத்துவமனை சுற்றுவட்ட வீதியை ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனைக்குச் செல்லும் குறித்த வீதியில் நீண்டகாலமாக வாகன நெரிசல் ஏற்பட்டு வருகின்றது. இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்ததுடன் அம்புலன்ஸ்களும் சிரமத்துடனேயே பயணிக்க வேண்டியிருந்தது.

இந்த நிலையில் குறித்த வீதியை எதிர்வரும் வாரங்களிலிருந்து ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் வவுனியா - கண்டி வீதி வழியாக வருகை தரும் பொதுமக்கள் வழமை போன்று மருத்துவமனை சுற்றுவட்டத்தை பயன்படுத்தி மருத்துவமனை வீதியால் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். அத்துடன் பூந்தோட்டம் பகுதியிலிருந்து மருத்துவமனைக்கு வருகைதரும் பொது மக்கள் கித்துள் வீதியையோ அல்லது குள வீதியைப் பயன்படுத்தி மருத்துவமனைக்குச் செல்ல முடியும்.

இது தொடர்பான தீர்மானங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்தினர், நகர சபையினர், பிரதேச செயலக உத்தியோகத்தினர், பொலிஸார் இணைந்து கலந்துரையாடி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மதுபான உரிமப் பத்திரத்துக்காக அரசுடன் இணைந்த எதிர்க்கட்சிகள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடல்

குருநாகல், ஜூன் 23

இன்றைய நிலவரப்படி, நாட்டின் அரசாங்கமும் எதிர்க்கட்சியிலுள்ள வேலை செய்யத் தெரியாத சில கட்சிகளும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு சேறுபூசி வருகின்றன. அவர்களைப் பொறுத்தவரை வளங்கள் இல்லாத இடத்துக்கு வளங்களை வழங்குவது தவறு என்றும் கருதுகின்றனர். மதுபான உரிமப் பத்திரம் கொடுத்தே இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துள்ளனர். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதாக தெரிவித்து, விகாரைகளுக்கு முன்பாகவும் மதுபான சாலைகளை திறந்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



இது போன்ற கேவலமான டீல்களை செய்து கொண்டு பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கணனிகளை விநியோகிப்பது அவர்களின் பார்வையில் தவறாக தோன்றி, பியர் அனுமதிப் பத்திரம் வழங்குவது தவறில்லாத ஒன்றாக தோன்றுகிறது. அவர்கள் தமது அனைத்து அரசியல் கொள்கைகளையும் பணத்துக்காக காட்டிக்கொடுத்துள்ளனர் என்றும் சஜித் சாடியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 249 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77,000 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் குருநாகல், யாபஹுவ, வலஸ்வெவ குணபால மலல சேகர மாதிரி பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு 21 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)


# காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி கிரிக்கெட் போட்டியில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 23

வலிகாமம் கல்வி வலய கிரிக்கெட் போட்டித் தொடரில் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாட சாலைகளுக்கு இடையிலான பிரதேச விளையாட்டுக்களில் கட்டம் 2 இல் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முதலாம் இடத்தையும், ஸ்கந்தவரோதய கல்லூரி இரண்டாம் இடத்தையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (எ)



# பறவை காய்ச்சல் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 23

இந்தியா போன்ற அயல் நாடுகளில் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ள நிலையில், இலங்கையை விழிப்புடன் இருக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளதுடன் எச்சரிக்கையாக இருக்குமாறு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் அல்லது ஏவியன் இன்ப்ளுவன்சா என்பது ஒரு வைரஸ் தொற்று நோயாகும்.

இது முதன்மையாக பறவைகளைப் பாதிக்கிறது, அத்தோடு மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். பறவைக் காய்ச்சலின் மிகவும் பொதுவான வடிவமாக H5N1 உள்ளது.

H5N1 என்பது வைரஸ் ஃஇன்ப்ளுவன்சா ஆகும். பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பறவை அல்லது விலங்குகளுடன் மனிதர்கள் தொடர்புகளை பேணினால் இந்த வைரஸ் மனிதர்களையும் தாக்கும்.

முக்கிய பறவைக் காய்ச்சல் வைரஸ் திரிபுகளில் H5, H7, H9 மற்றும் H10 ஆகியவை அடங்கும். H5N1, H5N8 (அரிதாக), H7N9, H7N2, H7N3, H7N7, H9N2 மற்றும் H10N8 ஆகியவை முக்கிய மனித தொற்று திரிபுகள். H5N1 மற்றும் H7N9 ஆகியவை குறிப் பாக கடுமையானவை, இத னால் அதிக உயிரிழப்பு ஏற்படுகிறது. H9N2 மற்றும் H10N8 பொதுவாக சாதாரண மான நோயை ஏற்படுத்தும். இந்த வைரஸ்கள் பிறழ்வடைந்து தொற்றுநோய்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியமாகதாகும்.

அண்மையில் இந்தியாவின் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்று ஏவியன் இன்ப்ளுவன்சா என்கிற 'A' வகை வைரஸால் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டது.

மனிதர்களுக்கு வைரஸ் பரவியமை தொடர்பில் கண்டறியப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். கோழிப்பண்ணையில் இருந்து வைரஸ் பரவியிருந்த நிலையில் அந்த குழந்தை குணமடைந்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தியாவில் முதன் முதலில் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் வைரஸ் பரவியமை கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் மே மாதம் அவுஸ்திரேலியாவில் முதன் முதலில் மனிதனுக்கு பறவைக் காய்ச்சல் பரவியதை உறுதிப்படுத்தியது. குறிப்பாக H5N1 திரிபு, சமீபத்தில் அமெரிக்காவில் இருந்து இந்தியா ஊடாக பயணம் செய்த ஒரு குழந்தைக்கு கண்டறியப்பட்டது.

2024 ஆம் ஆண்டு H5N1 பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கு பரவிய சந்தர்ப்பம் மூன்று பதிவாகியுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மற்றும் மிச்சிகனில் உள்ள மாடுகளிலிருந்து பரவியுள்ளது.

World Health Organization

இதுவரை பதிவாகியுள்ள பறவைக் காய்ச்சலின் அனைத்தும் விலங்குகளிலிருந்து பரவியவையாகும். அத்தோடு பறவைக் காய்ச்சல் மனிதனிடம் இருந்து மற்றுமொரு மனிதனுக்கு பரவியதற்கான எந்த ஆதாரமும் இதுவரை இல்லை.

இது தொடர்பில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஜூட் ஜயமஹா தெரிவித்தவை வருமாறு,

பறவைக் காய்ச்சலின் பல்வேறு திரிபுகளால் வைரஸ் மனிதர்களுக்கு பரவுவது கவலை அளிக்கிறது.

மனிதர்களுக்கு H9, H7 மற்றும் H5 பறவைக் காய்ச்சல் நோய்களைக் கண்டறியும் திறனை இலங்கை உருவாக்கியுள்ளது.

மேலும், மருத்துவமனைகளில் உள்ள வழக்கமான காய்ச்சல் பரிசோதனைகள் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதைக் கண்டறியும் திறன் கொண்டது என அவர் சுட்டிக்காட்டினார்.

பறவைகள் தங்கள் உமிழ்நீர், சளி மற்றும் எச்சங்கள் ஆகியவற்றில் வைரஸை வெளியேற்றுகிறது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட பறவைகள் அல்லது அசுத்தமான சூழலில் நெருங்கிய, பாதுகாப்பற்ற தொடர்பு கொண்ட மக்கள் அல்லது விலங்குகள் பாதிக்கப்படலாம் என மருத்துவர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வெளிநாட்டு நிதிக்காக காத்திருப்பதில் பயனில்லை

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்

பத்தரமுல்லை, ஜூன் 23

**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பனவற்றுக்காக நாம் வெளிநாட்டு நிதிக்கு காத்திருப்பதில் பயனில்லை. சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



வெப்பமண்டல நாடுகள் சுற்றாடல் தொடர்பான வர்த்தகத் திட்டங்களில் கவனம் செலுத்தி தமக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொள்ள செயல்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற 'WLI Asia Oceania Conference 2024' நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் நடைபெற்றது.

"சூழல்நேய சுற்றுலாத் துறைக்கான சதுப்பு நிலங்கள் மற்றும் சதுப்பு நில மையங்கள்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், கொரியா, மொங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்தான், மியன்மார், நியூஸிலாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, தாய்வான், ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய 15 நாடுகளில் உள்ள 70 இற்கும் மேற்பட்ட சதுப்பு நிலப் பூங்காக்களில் இருந்து சுமார் 100 சர்வதேச சதுப்பு நிலப் பூங்கா பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

உலகின் முதல் நகர்ப்புற சதுப்பு நில பெருநகரமான கொழும்பு நகரைச் சுற்றியுள்ள சதுப்பு நிலங்களை 03 நாட்கள் கண்காணித்து ஆய்வு செய்யும் வாய்ப்பை இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கியமை இதன் சிறப்பம்சமாகும்.

இந்த மாநாட்டில் மேலும் உரையாற்றிய ரணில் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை அரசாங்கம் தற்போது சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுவது தொடர்பான சட்டத்தை உருவாக்கி வருகிறது. ஆசியாவிலேயே முதன்முறையாக இதுபோன்ற பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்றது. மேலும் இது உலகின் பிற காலநிலை மாற்ற மையங்களுடன் இணைக்கப்படும்.

காலநிலை மாற்றக் கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்புக்கான மையமாக இந்தப் பல்கலைக்கழகம் செயல்படும். மேலும் எவருக்கும் குறுகிய கால பயிற்சி அல்லது பட்டப் பின் படிப்புகளுக்கான வாய்ப்புகளை இது வழங்கும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்த நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்த எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

# படகில் காலை மிதித்ததால் சக மீனவர் குத்திக்கொலை

பேருவளை, ஜூன் 23

பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பல நாள் மீன்பிடிப் படகில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் குழுவிலிருந்த ஒருவர் கூரிய ஆயுதத்தால் சக மீனவரை தாக்கி கொலை செய்துள்ளார்.

உறங்கிக் கொண்டிருந்த போது காலை மிதித்த சம்பவம் காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து இந்தக் கொலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் ஏனைய மீனவர்கள் இணைந்து கொலை செய்த மீனவரை கட்டிப்போட்டு கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

'சஹன் புதா' என்ற பல நாள் மீன்பிடிக் கப்பல் கடந்த 9 ஆம் திகதி ஐந்து மீனவர்களுடன் கடலுக்குச் சென்றது.

180 கடல் மைல் தூரத்தில் வைத்து தூங்கிக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் காலை மற்றொரு மீனவர் தவறுதலாக மிதித்துள்ளார்.

அப்போது, தூங்கிக் கொண்டிருந்த மீனவர் எழுந்து, அருகில் இருந்த கூரிய ஆயுதத்தால் காலை மிதித்த மீனவரின் வயிற்றில் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் அந்த மீனவர் உயிரிழந்த நிலையில் மீனவக் குழுவினர் சம்பவம் தொடர்பில் மீனவரிடம் கேட்டுள்ளனர்.

அப்போது, மற்ற குழுவினரையும் தாக்குவேன் என மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து குறித்த குழுவினர் ஒன்று சேர்ந்து கொலை செய்த மீனவரை பிடித்து கட்டி வைத்து கரைக்கு கொண்டு வந்தனர்.

இதன்படி பேருவளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் சுமார் ஒன்றரை நாட்களாக கட்டி வைக்கப்பட்டிருந்ததாலும், மோதல் காரணமாக காயமடைந்ததாலும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உறங்கிக் கொண்டிருந்த போது காலை மிதித்ததால் ஏற்பட்ட திடீர் ஆத்திரம் காரணமாக இந்தக் கொலையை செய்ததாக பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பேருவளை ரொக்லண்ட் வத்தை பகுதியைச் சேர்ந்த உபுல் சாந்த பெர்னாண்டோ என்ற 49 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

# அடையாள அட்டைக்கு காலஅவகாசம் உள்ளது

கொழும்பு, ஜூன் 23

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் இதுவரை தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியாத 40 வயதுக்கு மேற்பட்டோர் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இன்னும் உள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான காலஅவகாசம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை உள்ளதாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

பிரதேச செயலாளர்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கு மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (எ)

# மாடு திருடியவர்கள் துப்பாக்கியுடன் கைது

அம்பாந்தோட்டை, ஜூன் 23

அம்பாந்தோட்டையில் லுணுகம்வெஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி மூன்று மாடுகளைத் திருடிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு திருடப்பட்டதாகக் கூறப்படும் மாடுகளின் பெறுமதி 10 இலட்சம் ரூபாய் என பொலிஸார் கூறினர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம பகுதியைச் சேர்ந்த 24, 31 மற்றும் 48 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகம்வெஹர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாடசாலை மாணவியைக் கடத்தி கூட்டுப்பாலியல் துஷ்பிரயோகம்!

## 5 இளைஞர்களில் ஒருவர் கைது

ஹங்வெல்ல, ஜூன் 23

காதலனை சந்தித்துவிட்டு வீடு திரும்பிய மாணவியை கடத்திச் சென்று கூட்டுப்பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஐந்து இளைஞர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹங்வெல்ல, எம்புல்கம பிரதேசத்தில் 16 வயது பாடசாலை மாணவியைக் கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த குற்றத்தில் 5 இளைஞர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது காதலனைச் சந்தித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்த 5 பேர் மாணவியை பலவந்தமாக கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸார் கூறினர்.

கொஸ்கம பகுதியைச்சேர்ந்த மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய இளைஞர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

# தங்க நகைகளை கடத்தியவர்கள் விமான நிலையத்தில் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 23

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தங்க நகைகளுடன் பெண் உட்பட இருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக தங்க நகைகளைக் கடத்துவதாக விமான நிலைய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த சந்தேக நபர்கள் சிக்கினர்.

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயது நபரொருவரும் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது பெண்ணொருவருமே இவ்வாறு கைதாகினர்.

சந்தேக நபர்களிடமிருந்து 14 தங்க வளையல்கள், 3 தங்கச் சங்கிலிகள், 3 தங்க மோதிரங்கள் மற்றும் தங்கக் காதணிகள் உள்ளிட்ட ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
23.06.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நிராகரிப்புக்கு பதில் என்ன?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த மாதம் 18ஆம் திகதி ஆரம்பித்த குறித்த கூட்டத் தொடர் ஜூலை 12இல் முடிவடையும். வழமைபோல், இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை என்று நம்பப்படும் மனித உரிமைகள் மீறல் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை இலங்கை அரசு முற்றிலுமாக நிராகரித்திருக்கின்றது. கூட்டத் தொடரில் பேசியிருக்கும் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்தப் பொறிமுறை பயனற்றது. இது இலங்கை மக்களை மேலும் பிளவுபடுத்தவும் மேலும் துருவமயப்படுத்தவுமே பயன்படுமென்று தெரிவித்திருக்கின்றார்.

அவ்வாறாயின், இப்போது இலங்கை மக்கள் பிளவுபடாமலும் துருவமயப்படாமலுமா இருக்கின்றனர்? யுத்தம் முடிவடைந்து அல்லது போர் வெற்றியை பிரகடனம் செய்து 15 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட நல்லிணக்க முயற்சியில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வகையில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியவில்லை. இந்த நிலையில்தான் ஐ. நா. மனித உரிமைகளின் தலையீட்டை இலங்கை அரசு தொடர்ந்தும் நிராகரித்துவருகின்றது.

இலங்கை அரசு எப்போதும் உலக நிலைமைகளை தங்களுக்கு சாதகமான வகையில் அர்த்தப்படுத்திக் கொள்வதில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்கின்றது அல்லது அவ்வாறு எண்ணிக் கொள்கின்றது. தற்போது இடம்பெற்றுவரும் இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தின் போதான ஐ. நாவின் இயலாமையை - உலகின் முரண்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை இலங்கை அரசு ஒரு வாய்ப்பாக நோக்குகின்றது. பாரபட்சமற்ற முறையிலும் - ஒருவரை தேர்ந்தெடுத்து அழுத்தங்களை பிரயோகிக்காத வகையிலும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் செயல்பாடுகள் அமைய வேண்டுமென்றும் வாதிட்டிருக்கின்றது.

அதேவேளை, தற்போதைய உலகளாவிய புவிசார் அரசியல் போட்டியையும் நுட்பமாக தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்தும் நோக்கில் வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கின்றது. அதாவது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் நான்காவது உலகளாவிய கால மதிப்பீட்டு ஆய்வுக்கான சீனாவின் அறிக்கையை வரவேற்பதாகவும் வதிவிடப்பிரதிநிதி தனது உரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

சீனாவின் கருத்துகளை தாங்கள் வரவேற்பதாகவும் சீனா பல்வேறு விடயங்களில் பெரியளவில் வளர்ச்சியுற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இதன் மூலம், சீனா மேற்குலக மனித உரிமைகள் வரையறைகளை உள்வாங்காத போதிலும் தொடர்ந்தும் முன்னேறி வருகின்றது என்பதையே வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டுகின்றார்.

இதன் மூலம் தொடர்ந்தும் சீனாவின் ஆதரவை தக்கவைத்துக் கொள்ளும் இதேவேளை, அதிக அழுத்தங்களை பிரயோகித்தால் இலங்கை போன்ற நாடுகள் சீனாவின் மொடலை நோக்கிச் செல்லும் நிலையே ஏற்படும் என்பதையும் நாசூக்காக சுட்டிக்காட்ட முற்படுகின்றார். இதுதான் இலங்கையின் உலக அரசியல் சிக்கல்களுக்குள் தப்பிக்கொள்ளும் வாய்ப்பைத் தேடும் உத்தியாகும்.

ஒரு விடயத்தில் கொழும்பு தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. அதாவது, நாங்கள் ஐ. நா. மனித உரிமைகள் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை- நாங்கள் எங்களுடைய வழியில்தான் செல்வோம். அப்படியாயின், இலங்கையின் தொடர்ச்சியான நிராகரிப்புக்கு உலகின் பதில் என்ன? ஒன்றும் இல்லையா?

# முன்பள்ளி கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு



*யாழ்ப்பாணம், ஜூன் 23*

வட்டுக்கோட்டை- முதலியார் கோவிலடி கிராமத்தில் முன்பள்ளி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

'வெண்கரம்' தன்னார்வ அமைப்பின் 'கல்விக்கு கரம் கொடுப்போம்!' எனும் கருத்திட்டத்துக்கமைய அம்பாள் சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்

சனசமூக நிலையத் தலைவர் செ. நிஷாந்தன் தலைமை தாங்கியிருந்தார். கட்டடத்துக்கான முதல் அடிக்கல்லை மத குருமார்கள் இணைந்து நாட்டிவைத்தனர்.

தொடர்ந்து, 'திரண்டால் மிடுக்கு!' எனும் தொனிப் பொருள் கொண்டு முன்பள்ளிகளை அமைத்து வழங்கும் வெண்கரம் அமைப்பின் கருத்திட்டம் வெற்றியிலக்கை எய்த வேண்டும் என்ற நன்நோக்குடன், கல்வியாளர்களின் கரங்களால் கட்டடக் கற்கள் வரிசையிடப்பட்டன.

அந்தவகையில்,

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சி.அ. ஜோதிலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், வெண்கரம் அமைப்பின் முதன்மைச் செயல்பாட்டாளர் மு. கோமகன் உள்ளிட்டோர் அடிக்கற்களை நிலைப்படுத்தினர்.

விசேடமாக, முன்பள்ளிக் கட்டடத்துக்கான நிதியுதவியாக சுமார் 21 இலட்சம் ரூபாயை 'வெண்கரம்' அமைப்பு வழங்கியதுடன்,

'கல்வியால் நிமிர்வதற்கு கல்லொன்று தாரீர் !' என்கின்ற வெண்கரத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக, நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரும் ஆளுக்கொரு கல்லை பெற்று முன்பள்ளிக்கான அருங் கொடையை வழங்கி ஊக்கப்படுத்தினர். இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ)

# ஜெல்லி மீனால் 10 பேர் பாதிப்பு

*பாணந்துறை, ஜூன் 23*

பாணந்துறை கடலில் நீராடிக் கொண்டிருந்த 10 பேரின் உடலில் ஜெல்லி மீன் பட்டதால் ஏற்பட்ட தோல் ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், உடலில் குறித்த பகுதிகளில் சிவத்தல், அரிப்பு மற்றும் வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டன.

குறித்த குழுவினர் பாணந்துறை ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர். (எ)

# விபத்துக்களில் சிக்கிய இளைஞர்கள் மூவர் பலி

*கொழும்பு, ஜூன் 23*

கடுகன்னாவ மற்றும் பிலிமத்தலாவ ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் இளைஞன் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்தார்.

கண்டியிலிருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.


கடுகன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை, நாவுல அலஹெர மொரகஹகந்த வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் பலியானார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இடம்பெற்ற இந்த விபத்து ஏற்பட்டது. மேலும், நேற்று முன்தினம் இடம்பெற்ற மற்றுமொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது சிறுவன் உயிரிழந்தார்.

கலேவல பன்சியகம வீதியின் அலுத்வெவ சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து எதிர்த்திசையில் வந்த கப் வானத்துடன் மோதி வீதிக்கு அருகிலிருந்த தென்னை மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது. விபத்தில் படுகாயமடைந்த சாரதியும், பின்னால் அமர்ந்து சென்றவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் 16 வயது மாணவன் உயிரிழந்தார். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீவி, வீடியோ கேம்ஸ்க்கு குழந்தைகள் மூழ்கி விடாமல் இருக்க..

சத்குரு

நீங்கள் விரும்பும்படி வாழ்வதற்கான தைரியம் உங்களுக்கு இல்லை. எனவேதான் சினிமாவையோ, டி.வி-யையோ மிகவும் விரும்பிப் பார்க்கிறீர்கள். சினிமா அல்லது டி.வி-யில் நீங்களாக உங்கள் வாழ்க்கையில் எதுவும் செய்யத் தேவை இருக்கவில்லை. ஏனெனில், உங்களுக்காக உங்கள் கதாநாயகன், கதாநாயகி காதலிக்கிறார்கள். சண்டை போடுகிறார்கள். குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள், எல்லாமே அவர்கள் செய்கிறார்கள். நீங்கள் எதுவும் செய்யத் தேவை இருக்கவில்லை.

எனவேதான் அனைவரும் டி.வி-யை விரும்புகிறார்கள். மற்றவர்கள் மூலமாகத் தாங்கள் வாழ நினைக்கிறார்கள். நீங்கள் சென்று யாரையாவது காதலிக்க வேண்டுமென்றால், ஏகப்பட்ட பிரச்சனைகள் வரும். இல்லையா? நீங்கள் சென்று யாருடனாவது சண்டையிட வேண்டுமென்றால், எத்தனையோ பிரச்சனைகள் வரும். ஆனால், உங்கள் கதாநாயகன் உங்களுக்காகக் காதலிக்கும்போதோ, சண்டையிடும்போதோ உங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை, வீட்டிலேயே உட்கார்ந்து எல்லா அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம். எங்கும் போகத் தேவை இல்லை, எதுவும் செய்யத் தேவை இல்லை.

நீங்கள் யாரையெல்லாம் வீட்டுக்குள் விடமாட்டீர்களோ, அவர்கள் டி.வி மூலமாக உங்கள் வீட்டுக்குள் புகுந்துவிட்டார்கள். குடிகாரர்கள், கொலைகாரர்கள், பேய், பிசாசு எல்லோரும் புகுந்து நடனமாடிக்கொண்டு இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்களை உங்கள் வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும். இல்லையென்றால், வீட்டையும், உங்கள் மனதையும், குழந்தைகள் மனதையும் முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்வார்கள்.

நவீன விஞ்ஞானத்தால் ஏற்பட்ட மன முதிர்ச்சியற்ற விளைவுகளில் இதுவும் ஒன்று. எதையாவது புதிதாகக் கண்டுபிடித்துவிட்டால், அதை உடனே உலகம் முழுக்கப் பரப்பிவிடத் துடிக்கிறார்கள். ஏனெனில், அதில் பணம் புழங்குகிறது. மற்றொரு காரணம், சிறிது தாமதம் செய்துவிட்டாலும், வேறு யாராவது அதே போல் கண்டுபிடித்துப் பணம் பண்ணிவிடுவார்கள்.

புதிய கண்டுபிடிப்புகளில் நன்மை இல்லாமல் இல்லை. ஆனால், எந்த ஒரு கண்டுபிடிப்பையும் எந்த அளவுக்குப் பயன்படுத்துவது என்று நாமும் பார்க்க வேண்டும். இப்போது 24 மணி நேரமும் டி.வி ஓடுகிறது. 200 சேனல்களுக்கு மேல் இருக்கின்றன. எனவே, எல்லா சேனல்களும் உங்களை எப்படிக் கவர்வது என்று 24 மணிநேரமும் போட்டி போடுகின்றன. எனவேதான் பேயும் பிசாசும் உங்கள் டி.வியில் உலவுகின்றன.

குழந்தைகள் அந்தக் காட்சிகளைப் பார்க்கும்போது பயப்படுபவர்களாகவும் மனக் கோளாறுடனும் வளர்வார்கள். எதையாவது புதிதாகக் கண்டுபிடித்தால், 10 வருடங்கள் கழித்து அந்தக் கண்டுபிடிப்பால் என்னென்னப் பிரச்னைகள் ஏற்பட்டன என்று விரிவாகச் சொல்கிறார்கள். உடனே வேறொன்றை புதிதாக அறிமுகப் படுத்துகிறார்கள். அடுத்து 10 வருடங்கள் கழித்து அந்தக் கண்டுபிடிப்பில் ஏற்பட்ட பிரச்சனைகள் என்னென்ன என்று அடுக்குகிறார்கள். இப்படித்தான் போய்க்கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால், வாழ்க்கை எப்போதும் உங்களைத் தொடர்ந்து மன்னித்துக்கொண்டே இருக்காது. நமக்கு ஏதாவது ஒன்றில்கூட முழுமையாகப் புரிதல் இல்லை. மருத்துவத்தில்கூட ஒவ்வொன்றுக்கும் சிறப்பு மருத்துவரை வைத்திருக்கிறோம். கண்ணுக்கு ஒரு மருத்துவர், மூக்குக்கு ஒரு மருத்துவர், காதுக்கு ஒரு மருத்துவர், விஞ்ஞானம் இப்படித்தான் ஒவ்வொன்றையும் பகுத்துக்கொண்டே போகிறது. மனிதனின் தேவைகள் குறித்து முழுமையாகச் சிந்திப்பவர் யாரும் இல்லை.

10 வருடங்களுக்கு முன்பு டி.வியைத் திறந்தால் காட்சிகள் மெதுவாக நகரும். இப்போது காட்சிகள் மின்னல் வேகத்தில் இருக்கின்றன. இது அனைவருக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கு மிகவும் கெடுதல். அந்தக் காட்சிகளைப் பார்ப்பவர்கள் டி.வி-க்கு முன்பு நிறைய நேரம் உட்கார்ந்திருக்கும்போது கண்களைக்கூட இமைக்காமல், அசையாமல் உட்கார்ந்து பார்க்கிறார்கள். இவை அவர்களுக்கு சிறிது காலம் கழித்துத் துன்பம் தரும்.

ஏனெனில், நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியும், கேட்கும் ஒவ்வொரு சப்தமும் மூளையில் ஒரு குறிப்பிட்ட விதத்தில் விளைவை உண்டாக்குகிறது. அவை அவர்கள் மனதுக்குள்ளேயே இருந்து நீண்ட காலத்துக்கு வினையாற்றும். குழந் தைகள் வீட்டில் இன்டர்நெட் பார்க்கிறார்கள். தெருவில் வீடியோ கேம் விளையாடுகிறார்கள். விளையாட்டிலேயே குண்டு எறிகிறார்கள், துப்பாக்கியால் சுடுகிறார்கள். உலகத்தின் உண்மை நிலையை சிறுவர்களும் அறிவதில் தவறில்லை என நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், விளைவு சாதாரணமாக இருப்பதில்லை.

யாரோ ஒருவர் இது போன்ற விளையாட்டுக் கருவிகளை வைத்துக்கொண்டு பணம் பண்ண முயற்சித்தால், நாம் அதை அனுமதிக்கக் கூடாது. இது குழந்தைகளின் மனநிலையை மாற்றும். சில காலம் கழித்து அவர்கள் தங்கள் மனதையே கையாள முடியாமல் போய்விடும். பிம்பங்கள் திரையில் வரும் தற்போதைய வேகம் அவர்களுக்கு கெடுதலைத் தரும். இது போன்ற காட்சிகளைத் தொடர்ந்து பார்க்கும் சிறுவர்களுக்குப் பின்னாளில் தியானம்கூட சொல்லித்தர முடியாது.

ஏனெனில், அவர்களால் ஓர் இடத்தில் நிலையாக உட்கார முடியாது, அப்படி மாறிவிடுவார்கள். இப்போது நம் நாட்டில் பள்ளிச் சிறுவர்களை வைத்துப் பார்த்தால் கூட, கிராமத்துச் சிறுவர்கள் எந்த சிரமமும் இல்லாமல் ஒரே இடத்தில் நிலையாக உட்கார முடிகிறது. ஆனால், நகரத்துச் சிறுவர்களால் அப்படி உட்கார முடிவதில்லை.

நீங்கள் எங்காவது மலைப் பகுதிக்கோ, ஏரி - சமுத்திரப் பகுதிக்கோ சென்று 2, 3 நாட்கள் தங்கியிருந்தால், திடீரென்று அவை உங்களுக்குள் ஓர் இனிமையான தாக்கம் ஏற்படுத்துவதை உணர முடியும். ஏனெனில், உங்களுக்குள் இயற்கையான விஷயங்கள் அதிகம் நுழையும் போது அனைத்தும் இனிமையாகிறது. வாழ்க்கை என்றால் எப்படி இருக்க வேண்டும் என நமக்கு அவை நினைவூட்டுகின்றன.

சூரியன் உதிக்கிறான், பறவைகள் கூவுகின்றன, வண்ணத்துப் பூச்சிகள் பறக்கின்றன, மலர்கள் மலர்ந்திருக்கின்றன, காலையில் எழுந்து பார்த்தால், உங்கள் இதயம் இன்னமும் துடித்துக்கொண்டு இருக்கிறது. இந்த அற்புதங்களை எல்லாம் எப்போதாவது ரசித்திருக்கிறீர்களா? நீங்கள் இப்போது உங்களைச் சுற்றி எப்போதும் ஒரு பரபரப்பான உலகை உருவாக்கிக்கொண்டு இருக்கிறீர்கள்.

ஆனால், சில காலம் கழித்து அவை உங்களை வேறு பாதையில் செலுத்திவிடலாம். எனவே, உங்கள் குழந்தைகள் வழி தவறிப் போகாமல் இருக்க நீங்களும் கவனம் செலுத்த முடியும்.

## இந்தவார ராசிபலன் 23.06.2024 - 29.06.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 09
நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்கள் சந்தோஷ தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கோலாகலமாக நிறைவேறும். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்பட்டு, மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் ஓரளவு வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். புதிய வியாபார தொடர்புகள் மூலம் எதிர்பார்ப்புக்கு மேல் இலாபங்கள் குவியும். அதன் காரணமாக வருவாயும் ஓரளவு அதிகரிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களுத் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தானே வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள். நல்ல முன்னேற்றம் அளிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்காலத் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளைக் கையாள்வீர்கள். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரப்பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசாங்கத் துறைகளின் மூலமாக எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சீரான பொருளாதார நிலையால், மனதிற்குப் பிடித்தபடி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்குப் பெருமை சேர்க்கவேண்டும். எந்தவொரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவைப் பெறுவர். அறிவுத் தெளிவு ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாகக் கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பணவிஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை ஆகியவை கிடைக்கும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம். சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். சந்ததி விருத்தி ஏற்படலாம். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். வேகம் பிறக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். சுபச் செய்திகளை எதிர்பார்க்கலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாகச் செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். பண்புமிக்கவர்களின் நட்பு ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவால் ஏற்றம் காண்பீர்கள். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆயினும் முயற்சிகள் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். சிலருக்கு உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் ஆகியோரின் ஒத்துழைப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்குப் படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். உங்கள் திறமைமிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மேலதிகாரிகளின் உதவியால் உயர்பதவிகள் கிடைக்கும். உறவுகளை அனுசரித்துச் சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



**இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர்கள் மத்தியில் பொதுவேட்பாளர் தொடர்பில் நிலவும் முரண்பாடுகள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் முன்னிலையிலும் வெளிக்காட்டப்பட்டது. பொதுவேட்பாளர் யோசனை தொடர்பில் தொடர்ந்து ஆராயப்படுகிறது என்று ஏனைய தமிழ்கட்சிகளின் தலைவர்கள் கூறியபோது அவர் எந்த பிரதபலிப்பையும் வெளிக்காட்டவில்லை.**

ஏற்கெனவே குழம்பிப்போயிருந்த இலங்கை தமிழர் அரசியல் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் நிலவுகின்ற முரண்பாடுகள் காரணமாக மேலும் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறது.

தமிழ் கட்சிகள் ஐக்கியப்பட்டு செயற்படுவதில் நாட்டம் காட்டும் என்றோ அல்லது போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய காலப்பகுதியில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் உட்பட தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு ஒன்றிணைந்த நிலைப்பாடுகளுக்கு வரும் என்றோ எதிர்பார்ப்பதிலும் அர்த்தமில்லை. சாத்தியமான அளவுக்கு முரண்பட்டு நிற்பதற்கே தமிழ்க் கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்ற யோசனை அண்மைக் காலமாக தமிழர் அரசியலை ஆக்கிரமித்து நிற்கிறது. அது தொடர்பில் சில தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஆரம்பத்தில் இருந்த உற்சாகத்தை இப்போது காணவில்லை. பொதுவேட்பாளர் தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு கட்சிக்குள்ளும் கூட முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தும் யோசனைக்கு ஆதரவைத் திரட்டுவதற்காக 'மக்கள் மனு' என்ற சிவில் சமூக அமைப்பே முதலில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தது. தற்போது அந்த முயற்சியை 'தமிழ் மக்கள் பொதுச்சபை" என்ற புதியதொரு சிவில் சமூக அமைப்பு முன்னெடுக்கிறது.

பொதுவேட்பாளர் தொடர்பில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களின் பரந்தளவிலான ஆதரவை பெற முடியுமாக இருந்தால் தமிழ்க் கட்சிகளை வழிக்கு கொண்டுவரலாம் என்று தமிழ் மக்கள் பொதுச்சபையின் முக்கியஸ்தர்கள் நம்புகிறார்கள் என்று தெரிகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் கட்டுறுதியான சிவில் சமூக அமைப்புக்கள் ஒருபோதும் இருந்ததில்லை. அரசியல்வாதிகள் மீது நெருக்குதலைப் பிரயோகித்து அவர்களை ஒழுங்காக செயற்பட வைப்பதற்கு சிவில் சமூக அமைப்பை கட்டமைக்கும் முயற்சிகள் வரவேற்கப்படக்கூடியதே. அவற்றின் இலக்கு போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் இன்றைய வாழ்வியல் யதார்த்தங்களுக்கும் பொருத்தமானவையாக இருப்பது அவசியம். வெறுமனே உணர்ச்சிவசமான சுலோகங்களின் பின்னால் தமிழ் மக்களை அணிதிரட்ட முயற்சிப்பதில் அர்த்தமில்லை.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தற்போது தமிழ் மக்கள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தென்னிலங்கைக்கும் உலகிற்கும் வெளிக்காட்டுவதற்காக ஜனாதிபதி தேர்தலை வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக மாற்றும் நோக்கிலேயே தமிழ்ப் பொதுவேட்பாளர் யோசனை முன்வைக்கப்பட்டது. தமிழ்க்கட்சிகள் உறுதியான முடிவை எடுக்காமல் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் பொதுச்சபை தமிழ் மக்களின் இறைமை, பாரம்பரிய தாயகம் மற்றும் மக்களை ஐக்கியப்படுத்தி ஒரு தேசமாகக் கட்டியெழுப்புதல் என்று சில கோட்பாடுகளை முன்வைத்து பிரசாரங்களை முன்னெடுத்துவருகிறது.

பொதுவேட்பாளர் யோசனையை இவர்கள் தமிழ்த் தேசியத்துடன் இறுக்கமாக அடையாளப்படுத்தி பிரசாரங்களை செய்வதால் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் தங்களது எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை மனதிற்கொண்டு ஆதரவான கருத்துக்களை அவ்வப்போது கூறுவதற்கும் தவறுவதில்லை.

பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சி இறுதியில் சாத்தியமில்லாமல் போகும் என்று நம்புகின்ற சில அரசியல்வாதிகள் அதற்கு ஆதரவாகப் பேசுவதன் மூலம் தங்களை மிகவும் சாதுரியமானவர்களாகக் காட்டிக்கொள்கிறார்கள் என்பதுவும் உண்மை.

பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சியின் பின்னணியில் இருக்கக்கூடிய உள்நாட்டு மற்றும் வெளிச்சக்திகள் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகின்றன. தென்னிலங்கையின் குறிப்பிட்ட ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான ஒரு தந்திரோபாயமே இது என்று ஆரம்பம் முதலிருந்தே சந்தேகிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய அரசியலின் சமகால மையமாக பொது வேட்பாளரை காட்சிப்படுத்துவதில் தமிழ் மக்கள் பொதுச்சபை முனைப்புக் காட்டுகிறது. ஆனால் அவர்கள் வெறுமனே கோட்பாடுகளைப் பற்றிப் பேசுகிறார்களே தவிர, தெளிவான அரசியல் கோரிக்கைகளை இன்னமும் முன்வைக்கவில்லை.

தமிழ் மக்கள் இன்று வேண்டிநிற்பது என்ன என்பதை ஜனாதிபதி தேர்தலின் மூலம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தென்னிலங்கைக்கும் உலகிற்கும் வெளிக்காட்டிவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்ட சக்திகள் தமிழ் மக்களுக்கு முன்கூட்டியே கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கின்றன.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு பிறகு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் தலைவர்கள் 1977 ஜூலை பொதுத்தேர்தலை தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆணையைப் பெறுவதற்கான ஒரு வாக்கெடுப்பாகவே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் முன்கொண்டு சென்றார்கள். அந்த தேர்தலில் பிரமாண்டமான வெற்றியைப் பெற்ற அந்த தலைவர்களிடம் அடுத்து என்ன செய்வது என்ற எந்த திட்டமும் இருக்கவில்லை. அதன் விளைவாக தமிழ் மக்களுக்கு நேர்ந்த அவலம் அண்மைக்கால வரலாறு. அதேபோன்ற வரலாறு மீண்டும் திரும்பிவரக்கூடிய ஆபத்தை உணர்ந்தவர்களாக பொதுவேட்பாளர் யோசனைக்கு ஆதரவாகப் பேசும் அரசியல்வாதிகளும் புதிய சிவில் சமூக முக்கியஸ்தர்களும் மனதிற்கொள்ள வேண்டும்.

அதேவேளை, பொதுவேட்பாளரை தெரிவுசெய்வதற்கான செயன்முறை குறித்து ஏற்கெனவே சில தமிழ் அரசியல்வாதிகளும் சிவில் சமூக முக்கியஸ்தர்களும் வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் மிகவும் சுவாரஸ்யமானவையாக இருக்கின்றன.

பொதுவேட்பாளர் ஒரு அரசியல்வாதியாக இருக்கக்கூடாது என்றும் அவர் தமிழ் மக்கள் தென்னிலங்கைக்கும் உலகிற்கும் கூறவிரும்பும் செய்தியின் ஒரு அடையாளமாக மாத்திரமே இருக்கவேண்டும் என்றும் கூறப்படுகிறது. அதேவேளை, ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு அவர் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டக்கூடாது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது, பொதுவேட்பாளர் ஒரு அரசியல் துறவியாக இருக்கவேண்டும். ஏற்கெனவே தமிழர்கள் மத்தியில் துறவிகளாக இருப்பவர்களில் சிலர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுவரும் நிலையில், ஜனாதிபதி தேர்தலில் உத்தேச பொதுவேட்பாளர் தமிழ் மக்கள் மத்தியில் கணிசமான வாக்குகளைப் பெறும் பட்சத்தில் அவர் அரசியலில் ஆர்வம் காண்பிக்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அத்தகைய ஒரு 'அரசியல் துறவியை' தமிழ்ச் சமூகத்தில் கண்டுபிடிக்க முடியுமா?

ஒரு கோட்பாட்டு அடிப்படையில் நோக்கும்போது பொதுவேட்பாளர் வடக்கு, கிழக்கில் கணிசமான வாக்குகளைப் பெறுவாரேயானால், தமிழ் மக்களின் எதிர்கால தலைவராக அவர் அடையாளம் காணப்படக்கூடிய சாத்தியத்தையும் நிராகரிக்கமுடியாது. இது குறித்த சந்தேகம் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இருக்கக்கூடும். அதுவே அவர்களில் பலர் மத்தியில் பொதுவேட்பாளர் விடயத்தில் உற்சாகமான ஒரு மனநிலையைக் காணமுடியவில்லை.

பொதுவேட்பாளருக்கு தமிழர்கள் மத்தியில் கிடைக்கக்கூடிய ஆதரவைப் பொறுத்து தமிழ் மக்கள் பொதுச்சபை ஒரு புதிய அரசியல் கட்சியாக மாறக்கூடிய வாய்ப்பையும் எளிதில் நிராகரித்துவிட முடியாது.

கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தபோது தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக தெரிய வருகிறது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர்கள் மத்தியில் பொதுவேட்பாளர் தொடர்பில் நிலவும் முரண்பாடு ஜெய்சங்கர் முன்னிலையிலும் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. மற்றைய தமிழ் கட்சிகளின் தலைவர்கள் பொதுவேட்பாளர் விவகாரம் ஒரு ஆலோசனைக் கட்டத்திலேயே இன்னமும் இருக்கிறதே தவிர, உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறியதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் அது தொடர்பில் எந்த கருத்தையும் கூறவில்லை என்றும் தெரியவந்தது.

அதேவேளை, பொதுவேட்பாளர் யோசனைக்கு எதிராக கருத்து வெளியிடுபவர்களை தமிழ்த்தேசியத்துக்கு எதிரானவர்கள் என்று வர்ணிக்கும் ஒரு போக்கும் காணப்படுகிறது. இது தமிழர் அரசியலில் காலங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஒரு வக்கிரத்தனமான அரசியல் போக்கின் ஒரு தொடர்ச்சியான வெளிப்பாடே தவிர வேறு ஒன்றுமில்லை.

தமிழ்த் தேசியம் என்பது வலுவானதாக இருக்க வேண்டுமானால், தமிழர்களின் பாரம்பரிய தாயக நிலப்பரப்பும் அதன் மக்களின் இருப்பும் இன்றியமையாதவை. தங்களது சொந்தப் பிரதேசத்தில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தங்களுக்கும் தங்களது சந்ததியினருக்கும் ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இருக்கவேண்டும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இன்று அத்தகைய ஒரு சூழ்நிலை வடக்கு, கிழக்கில் இல்லை. பெரும்பாலான தமிழர்கள் மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்வதில் நாட்டம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நிலைவரம் தமிழ்ப்பகுதிகளின் குடிப்பரம்பலுக்கு பாரதூரமான ஆபத்தை தோற்றுவிக்கக் கூடியதாகும்.

வடக்கு, கிழக்கில் தமிழர்களில் எத்தனை பேர் வெளிநாடுகளுக்கு செல்லாமல் சொந்த மண்ணில் தொடர்ந்தும் வாழ்வதற்கு விரும்புகிறார்கள் என்பதை அறிய ஒரு கருத்துக்கணிப்பை நடத்தினால் பயனுடையதாக இருக்கும். பொதுவேட்பாளர் யோசனைக்கு ஆதரவை திரட்டுவதில் ஈடுபட்டிருக்கும் சிவில் சமூக அமைப்பு புலம்பெயர்வதில் தமிழர்கள் காட்டும் ஆர்வத்தின் ஆபத்தையும் மக்களுக்கு விளக்கிக்கூறுவதில் கவனம் செலுத்தினால் கூடுதல் பயனுறுதியுடைய ஒரு பணியை செய்வதாக அமையும்.

இது இவ்வாறிருக்க, ஜெய்சங்கருடனான சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர ஏனைய கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை நடத்தி அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தின.

ஜனாதிபதி தேர்தலின் பிரதான வேட்பாளர்களான எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் 13 வது திருத்தத்தை தங்களது எதிர்கால அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்திருந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெடுகவும் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டவர். (14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் - கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம்: அடுத்தடுத்து தொடரும் உயிரிழப்புகள்!

ஆ.நந்தகுமார்

தமிழகத்தில் கள்ளக்குறிச்சியில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததால் உடல்நலம் பாதிக்கப்பட்ட 193 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இதுவரை 53 பேர் உயிரிழந்துவிட்டனர். கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம் மற்றும் புதுச்சேரி மருத்துவமனைகளில் 140 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியனின் கூற்றுப்படி, அவர்களில் சிலரது உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. கள்ளச்சாராயம் குடித்ததால் 12 பேருக்கு கண் பார்வைக் குறைபாடு ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

### கடந்த சில ஆண்டுகளில் நடந்த மரணங்கள் எவை?

தற்போது கள்ளக்குறிச்சியில் நிகழ்ந்திருக்கும் கள்ளச்சாராய மரணம், கடந்த 2 தசாப்தங்களில் தமிழ்நாட்டில் நடந்த மிகப்பெரிய கள்ளச்சாராய மரணமாக உள்ளது.

2023 மே மாதம் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் மற்றும் செங்கல்பட்டின் மதுராந்தகத்தில் கள்ளச்சாராயம் குடித்ததில் 21 பேர் உயிரிழந்தனர்.

2008-ம் ஆண்டு தமிழ்நாடு-கர்நாடக எல்லையில் கள்ளச்சாராயம் குடித்து 148 பேர் பலியாகினர், இதில் 41 பேர் தமிழர்கள். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து 21 போலிசாரை தமிழ்நாடு அரசுப் பணியிடை நீக்கம் செய்தது.

2001-ம் ஆண்டு பண்ருட்டியில் கள்ளச்சாராயம் குடித்ததில் 52 பேர் இறந்தாக டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி குறிப்பிட்டுள்ளது. 20 பேருக்குக் கண்பார்வை பறிபோனது. புதுச்சேரியிலிருந்து சில வியாபாரிகள், கள்ளச்சாராயத்தைக் கொண்டுவந்து விற்றதாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கள்ளச்சாராய விற்பனை தொடர்வது எங்கே?

திருவண்ணாமலை, திருப்பத்தூர் மாவட்டத்தின் ஜவ்வாது மலை, கள்ளக்குறிச்சியின் கல்வராயன் மலை ஆகிய பகுதிகளில் கள்ளச்சாராயம் உற்பத்தி செய்யப்பட்டதாக பலமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு பிறகு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் கள்ளச்சாராயம் விற்பனை தொடர்பாக ரெய்டு நடத்தப்பட்டு, கன்னியாகுமரி உள்பட சில இடங்களில் கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர விழுப்புரம், கடலூர், அரியலூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அடிக்கடி கள்ளச்சாராயம் தொடர்பான ரெய்டு நடத்தப்பட்டும் கைதும் நடக்கிறது.

யார் அதிக போதை தரும் சாராயத்தை உற்பத்தி செய்வது என்ற போட்டியில், மெத்தனால் கலந்து விற்கும் நிலை வட தமிழ்நாட்டில் சில இடங்களில் காணப்படுவதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் அதிகளவிலான மக்கள் விவசாய தொழிலாளர்களாகவும், தினக்கூலிகளாகவும் உள்ளனர். விவசாய கூலி வேலை, சுமை தூக்கும் வேலை, பெயிண்டிங் பிளம்பிங், கொத்தனார், சித்தாள், காவலாளி போன்ற வேலைகளை இவர்கள் நம்பியுள்ளனர்.

டாஸ்மாக் கடைகளில் அதிக விலைக்கு மதுபானம் வாங்க முடியாத பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள இவர்கள், இதுபோன்ற கள்ளச்சாராயத்தை நோக்கிச் செல்வதாக கள்ளக்குறிச்சி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இங்கே பாக்கெட் சாராயம் 50 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்திருப்பதாக மரக்காணம் பகுதியை சேர்ந்த பத்திரிகையாளர் முருகன் கூறுகிறார்.

'உடல் உழைப்பு மிகுந்த வேலைகளைச் செய்யும் தொழிலாளர்கள் உடல் வலிக்காக தினமும் மது அருந்த விரும்புகின்றனர். தினசரி 300- 400 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு தொழிலாளி, டாஸ்மாக் கடைக்குச் சென்று 120 முதல் 150 ரூபாய் செலவழித்து மதுபானம் அருந்த விரும்புவதில்லை. அதற்குப் பதிலாக பாதி விலையில் சாராயம் குடித்துவிடலாம் என நினைக்கிறார்கள்." என்கிறார் முருகன்.





### கள்ளச்சாராய வணிகம் ஏன் நீடிக்கிறது?

தமிழ்நாட்டில் 5,329 டாஸ்மாக் மதுபான கடைகள் இருந்தபோதிலும், கள்ளச்சாராய விற்பனை இன்னும் தொடர பல காரணங்கள் உள்ளன.

ஒன்று இதன் விலை. ஒரு பாக்கெட் சாராயத்தின் விலை 50 ரூபாய் மட்டுமே என்பதால், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களின் விருப்பமாக இது உள்ளது. மற்றொன்று, அதிகாலை முதல் நள்ளிரவு வரை எப்போதுமே கிடைக்கும் என்பதால், கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கள்ளச்சாராயத்தை நோக்கி செல்வதாக முருகன் விவரித்தார்.

கள்ளக்குறிச்சியில் 24 மணிநேரமும் இந்த கள்ளச்சாராயம் கிடைப்பதாகவும், அதுவும் ஆட்டோ, இருசக்கர வாகனம் என பலவற்றிலும் வந்து வீட்டிலேயே கொடுத்துவிட்டு போகும் வழக்கம் உள்ளதாகவும் அப்பகுதி பெண்கள் கூறினர்.

### காவல்துறை நடவடிக்கை என்ன?

கள்ளச்சாராயத்தை தடுப்பது தமிழ்நாடு மதுவிலக்கு கலால் பிரிவு காவல் துறையின் பொறுப்பாகும். கடந்த 2021 முதல் கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கையில் 4 லட்சத்து 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 565 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வருடம் நடந்த மரக்காணம் கள்ளச்சாராய மரணத்தில், சி.பி.சி.ஐ.டி காவல்துறையினர் 21 பேரை கைது செய்ததுடன், அதில் 8 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

அண்மையில் கல்வராயன் மலையில் இயங்கி வந்த கள்ளச்சாராய ஆலை ஒன்றை கடலூர் மாவட்ட கலால் காவல் துறையினர் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தனர்.

கல்வராயன் மலை மற்றும் ஜவ்வாது மலையில், சாராய ஊறல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படுவது குறித்து அவ்வப்போது செய்திகள் வெளியாகும். அதேபோல, மாவட்ட எல்லைகளிலும், ஆந்திரா - தமிழ்நாடு, புதுச்சேரி - தமிழ்நாடு மாநில எல்லைகளிலும் மதுவிலக்கு கலால் துறையினர் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இத்தகைய நடவடிக்கைகளால் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை என்பதை கள்ளக்குறிச்சி சம்பவம் சுட்டிக் காட்டுகிறது.

### அரசு சொல்வது என்ன?

கள்ளச்சாராய மரணத்தை தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த அமைச்சர் எ.வ.வேலு, 'இந்த சம்பவத்தை நாங்கள் நியாயப்படுத்த விரும்பவில்லை. இந்த சம்பவம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. விஷ சாராய விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஆட்சியர், காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என்றார்.

கள்ளக்குறிச்சியில் மரணங்கள் அதிகரிக்கத் தொடங்கியவுடன், அம்மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சமய்சிங் மீனா பணியிடை நீக்கம் செய்யப்பட்டு புதிய எஸ்.பி.யாக ரஜத் சதுர்வேதி நியமிக்கப்பட்டார்.

'இது காவல்துறையின் கவனக்குறைவால் நடந்திருப்பது கண்டறியப்பட்டு, கள்ளக்குறிச்சி எஸ்.பி. உள்ளிட்ட 10 காவல்துறை அதிகாரிகள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு, தண்டனை கிடைக்க வழிவகை செய்யப்படும். யாருக்கும் அரசு பரிவு காட்டாது," என்று தமிழக அரசு அறிக்கை வெளியிட்டது.

கள்ளச்சாராய உயிரிழப்புகள் பற்றிய வழக்கு சி.பி.சி.ஐ.டி-க்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த சம்பவம் குறித்தான விரிவான அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ள்ளக்குறிச்சியின் புதிய மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தெரிவித்தார்.

அத்துடன் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சமும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டது.

மேலும் இது தொடர்பாக விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் தமிழக அரசால் அமைக்கப்பட்ட நிலையில், வெள்ளிக்கிழமையன்று இந்த ஆணையம் விசாரணையை துவங்கியது.

எதிர்க்கட்சிகள் கூறுவது என்ன?

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டதற்கு திமுக முக்கிய நிர்வாகிகளே காரணம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்திருப்பதாக, இந்த மரணங்களுக்குத் தார்மீக பொறுப்பேற்று தமிழக முதல்வர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

'தமிழகம் முழுவதும் ஆறாக ஓடும் கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்கத் திறனில்லாமல் தொடர்ந்து உயிர்கள் இழப்பிற்கு மதுவிலக்குத் துறை அமைச்சர் முழு பொறுப்பேற்க வேண்டும். கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்காத, அமைச்சர் முத்துசாமியை முதல்வர் ஸ்டாலின் உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்" என பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

'கள்ளச்சாராய சாவுகள் குறித்த அனைத்து உண்மைகளும் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். கள்ளச்சாராய வணிகர்களுக்கு காவலாக இருப்பவர்கள் எவ்வளவு உயர்பதவியில் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எனவே, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சாவுகள் குறித்த விசாரணையை சி.பி.ஐ.யிடம் தமிழக அரசு ஒப்படைக்க வேண்டும்." என பாமக நிறுவனர் ராமதாஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### விழிப்புணர்வு அவசியமா?

மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டுமே கள்ளச்சாராய ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும் என திருப்பத்தூர் மலைக் கிராமங்களில் கள்ளச்சாராயத்தின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் சமூக ஆர்வலர் ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

'தற்போது அதிகம் செயல்படுத்தப்படாமல் உள்ள கிராம காவல் திட்டத்தின் கீழ், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், தலையாரிகள் ஆகியோரை காவல்துறை தொடர்பு கொண்டு, அந்தந்த கிராமத்தில் முறைகேடாகச் சாராயம் விற்பது குறித்தும், அதில் ஈடுபடுவோர் குறித்தும் தகவல் அளிக்க அவர்களை வலியுறுத்த வேண்டும். மாவட்டம் முழுவதும் கிராம அளவில் காவல்துறை அதிகாரிகள் சாராயத்தை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய கட்சிகளிடம் வளர்ந்துவரும் பிளவு கண்ட ஜெய்சங்கரின் ராஜதந்திரம்!

பனங்காட்டான்

வடக்குக்கு முதலாவதாகச் சென்று ஜனாதிபதித் தேர்தலுக்கு நாடிபிடித்துப் பார்த்தவர் ரணில் விக்கிரமசிங்க. அடுத்தடுத்துச் சென்றவர்கள் சஜித் பிரேமதாசவும், அநுர குமார திசநாயக்கவும். இவர்கள் எல்லோருக்கும் கைகொடுத்தது ராஜிவ் - ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் 13ம் திருத்தமும் மாகாண சபையும்தான்.

இவர்கள் மூவருக்குள்ளும் சில விடயங்களில் வித்தியாசமானவராக அநுரவைப் பார்க்கலாம். ஜனாதிபதித் தேர்தலுக்கு அதிகாரபூர்வமான அறிவிப்பு வருவதற்கு முன்னரே இது தொடர்பாக ஐந்து வெளிநாடுகளுக்குச் சென்று பரப்புரைகளை மேற்கொண்டுள்ளார் இவர். சுவீடன், அமெரிக்கா, இந்தியா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளை இதுவரை சுற்றியுள்ளார். இவருக்கு இந்நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுநிகழ்வுகளை நட்பு ரீதியான கூட்டங்கள் (Friendly Meetings) என்று பெயரிடப்பட்டது. ஆனால், இங்கு நிகழ்த்தப்பட்ட உரைகளும் கேள்வி பதில்களும் வரப்போகும் தேர்தலை மையப்படுத்தியவை.

ரணிலும் சஜித்தும் ஏறுக்குமாறாக 13ம் திருத்தம், மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பற்றி தமிழர் தாயகத்தில் குறிப்பிட்டபோது, அநுர மட்டும் தடுமாற்றமின்றி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியவர். 'தற்போதைய நிலையிலேயே 13ம் திருத்தம் பேணப்படும்' என்பதே அநுரவின் சொற்பதம்.

அதாவது, தற்போது மாகாண சபைகளுக்கு காணி அதிகாரமும் காவற்துறை அதிகாரமும் இல்லை. ஆரம்பத்தில் ஒன்றாகவிருந்த வடக்கு கிழக்கு மாகாண சபை இப்போது இரண்டாக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இரண்டினதும் இணைப்பை சட்டபூர்வமாக இல்லாமல் செய்தவர்களும் அநுர தரப்பினரே.

எனவே, தற்போதுள்ள நிலையிலேயே 13ம் திருத்தம் பேணப்படும் என்பதானது எதுவுமேயில்லாத ஒரு சபையை அமைக்க தாங்கள் எதிர்ப்பில்லை என்பதே அநுரவின் நிலையான நிலைப்பாடு.

தமிழர்களின் இனப்பிரச்சனைத் தீர்வு, தேர்தல்கள் என்றெல்லாம் வரும்போது, முரண்பாடான தமிழ் தலைவர்கள் ஒரு விடயத்தைக் கூறுவார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்நாட்டுத் தீர்வு விடயங்களில் தலையிடக்கூடாது என்று இவர்கள் கூறுவதைக் கேட்கக்கூடியதாகவுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்தும் அவர்களின் அமைப்புகளிடமிருந்தும் தேர்தல் செலவுக்கு நிதி கேட்கலாம், வாங்கலாம், சுருட்டலாம். ஆனால், நேரடியாக கட்சிகளின் வேட்பாளர்கள் தெரிவுகளிலோ, பிரச்சனைத் தீர்வு விடயங்களிலோ தலையிடக்கூடாது என்பதே இவர்களின் கருத்து.

இதனை இங்கு குறிப்பிடுவதற்கு முக்கியமான காரணம், ஜனாதிபதித் தேர்தலையொட்டி வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) அநுர பற்றி அவரது பரம எதிரிகள்கூட எதுவும் சொல்லவில்லை. ரணில், சஜித் உட்பட சிங்களக் கட்சிகள் எதுவும் அநுரவின் வெளிநாட்டு விஜயங்களை விமர்சிக்கவும் இல்லை. வெளிநாடுகளில் நட்பு ரீதியான கூட்டங்கள் பெருமளவில் அவருக்கு அள்ளிக் கொடுக்கின்றன. அதுவே அவரது தேர்தலுக்கான மூலதனம்.

1971 ஏப்ரல் சேகுவெரா புரட்சியின் பின்னர் ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. ஆதரவாளர்கள் இலங்கை அரசின் கைது, கொலை என்பவற்றிலிருந்து தப்புவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று அடைக்கலம் பெற்றனர். இப்போது அவர்களே தங்களின் ஆதரவை பெருமளவில் அநுரவுக்கு வாரி வழங்குகின்றனர் என்பது இலங்கை அரசுக்கோ அதன் புலனாய்வுத்துறைக்கோ தெரியாததல்ல.

இதனை மையமாக வைத்துப் பார்க்கின், உலகளாவிய ரீதியில் சிங்கள மகாஜனங்களின் ஆதரவு அநுரவுக்கு மேலோங்கிச் செல்கிறது என்று சொல்லலாம். அவர்கள் வழங்கும் ஆதரவு உள்நாட்டுப் போட்டிக்கு நிச்சயமாக அநுரவுக்கு கைகொடுக்கும். ஆனால், போட்டி என்பது மும்முனையாகவே இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்ற செய்தி அல்லது வதந்தி வேகமாகப் பரப்பப்படுகிறது. அண்மையில் ஒரு பொது நிகழ்வில் இவரிடம் - நீங்கள் போட்டியிட்டால் வெற்றி பெறுவீர்களா - என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு, தோல்வி அடைவதானால் நான் போட்டியிடமாட்டேன் என ரணில் அளித்த பதிலினால் அனைவரும் சிரிப்பில் ஆழ்ந்தனர்.

இந்த மாதம் 30ம் திகதியிலிருந்து நான்கு பிரதான பொதுக்கூட்டங்களை ரணில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். முதலாவது கூட்டம் 30ம் திகதி மாத்தறையில் இடம்பெறும். யூலை 7ம் திகதி பதுளையிலும், யூலை 14ம் திகதி கண்டியிலும், யூலை 21ம் திகதி காலியிலும் இவை நடைபெறவுள்ளன. இவ்வேளையில் ரணில் தாம் போட்டியிடப் போவதை அறிவிப்பாரென அவரது ஐக்கிய தேசிய கட்சியினர் அறிவித்து வருகின்றனர். எனினும், ரணில் சுயேட்சை வேட்பாளராகவே களத்தில் இறங்குவாரெனவும் இவர்கள் கூறுகின்றனர்.



> இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ்த் தேசிய பிரதிநிதிகள் எண்மருடன் நடத்திய சந்திப்பு அவருக்கு எதனை எடுத்துக் கூறியது? 2009 வரை ஒன்றாக நின்றவர்கள் பதினைந்து ஆண்டுகளில் நான்காகி, பிரதான விடங்களில்கூட ஒரே குரலாக வரமுடியாதுள்ளனர் என்பதை அறிய வைத்தது அவரது ராஜதந்திரம்.

ரணிலின் அறிவிப்பின் பின்னரே மகிந்தவின் பொதுஜன பெரமுன தங்கள் நிலைப்பாட்டை அறிவிக்கும். இப்போதுள்ள அரசியல் காலநிலை ரணிலையே பொதுஜன பெரமுன ஆதரிக்க வேண்டியதாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டுமென ரணிலை நெருக்கி வந்த பசில் ராஜபக்ச அதில் தோல்வி கண்ட பின்னர் இப்போது அமைதி காக்கிறார். இதனால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் ஒதுங்கிக் கொள்வாரென எதிர்பார்க்கலாம்.

எண்பது வயதை அண்மித்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ச மூப்பு, பிணி, நடமாட்ட இயலாமை காரணங்களால் மட்டுமன்றி, தமது மகன் நாமலின் எதிர்கால அரசியல் நலனையும் கருதி ரணிலுடன் சேர்ந்து பயணிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளார். அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலூடாக நாமலை சிங்காசனத்தில் ஏற்றலாம் என்ற நிலைப்பாட்டுக்கு அவர் வந்துள்ளது அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்தப் பின்னணியில் ரணில் பல்வேறு கட்சிகளின் ஆதரவைப் பெற்று (பறித்தும், பிரித்தும்) போட்டியிடுவதன் மூலம் இலகுவாக வெற்றி பெறலாமென நம்புகிறார். சிலவேளை இது சாத்தியப்படலாம். இதற்காகவே சில விடயங்களை தாமாகவே வலிந்து முன்னெடுத்து அவைகளை செயற்படுத்த முடியாதிருப்பதையும் கவனிக்க முடிகிறது.

கோதபாய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவான பின்னர் இனப்பிரச்சனை என ஒன்றுமில்லை என்பதே அவரது தரப்பின் கோசமாக இருந்தது. ஆனால், ரணில் ஜனாதிபதியானதும் பல்லவி வேறானது. தமிழர் தரப்பை ஆற்றுப்படுத்த (ஏமாற்ற) 13ம் திருத்தமும் மாகாண சபைகளும் என்ற விடயத்தை ரணில் உள்வாங்கினார். கடந்த வருட சுதந்திர தினத்துக்கு முன்னர் 13ம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்.

தமிழ்த் தேசிய கட்சிகளை அழைத்து அவர்களை நம்ப வைத்து இதனை உறுதிப்படுத்தினார். இந்திய பிரதமர் மோடியிடமும் இந்த உறுதியை வழங்கினார். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. கடந்த வருட ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது 13ம் திருத்தம் நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் அவசியமானதால் அது நடைமுறைப்படுத்தப்படுமென கூறி நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும் வேண்டினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், 13ம் திருத்தம் முக்கியமான ஒன்றாக அரசியல் அமைப்பில் உள்ளது என்றும், இதனை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் 4ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ரணில் அங்கு உரையாற்றுகையில் 13ம் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை என்றும் இதில் மத்திய அரசு தலையிடாது என்றும் ஒருபடி மேலே சென்று தெரிவித்தார். இவர் ஜனாதிபதி பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகப்போகிறது. ஆனால் இதுவரை ஓர் அங்குலம்கூட முன்னேறவில்லை.

கடந்த ஜனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தமிழர் தரப்பு பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியபோது தாங்கள் ஜனாதிபதி ரணிலுடன் தீர்வு தொடர்பாக பேசிக் கொண்டிருப்பதாக தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த ஜெய்சங்கர், 'தீர்வை பற்றி பேசிக் கொண்டேயிருப்பது தீர்வாகாது. இருக்கும் அதிகார பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்தாது போனால் கிடைப்பதும் இல்லாது போய்விடும்" என்று நெற்றியில் அடிப்பதுபோல ஆலோசனை வழங்கி அவர்களை அனுப்பி வைத்தார்.

மோடியின் மூன்றாவது ஆட்சியிலும் வெளியுறவு அமைச்சராகியுள்ள ஜெய்சங்கர் கடந்த வாரம் குறுகிய விஜயமாக இலங்கைக்கு வருகை தந்தபோது வழமைபோல தமிழர் தரப்பையும் சந்தித்தார். தமிழ்த் தேசிய தரப்பில் நான்காக நிற்கும் கட்சிகளையும் சேர்ந்த எண்மர் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

கடந்த வருடம் சந்தித்தபோது தெரிவித்த விடயங்களையே அதே பல்லவியில் தமிழ்த் தேசிய தரப்பினர் ஜெய்சங்கரிடம் தெரிவித்தது அவருக்கு சப்பென்று இருந்திருக்கும். அதனாலோ என்னவோ தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தையும் தமிழர் தரப்பினர் ஜெய்சங்கர் முன்னால் எடுத்துப் போட்டனர். தமிழரசுக் கட்சியினர் இவ்விடயத்தில் பிளவுபட்டிருப்பதை மட்டுமன்றி, நான்கு அணியினரும் மூன்றாகி நிற்பதையும் ஜெய்சங்கர் கண்டு கொண்டார்.

2009 வரை ஒன்றாக இருந்தவர்கள் பதினைந்து ஆண்டுகளில் நான்காகியது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்காது. இவர்கள் ஒரே குரலில் நின்றிருந்தால்தான் அவர் ஆச்சரியப்பட்டிருப்பார். தாம் எதுவுமே பேசாது, தமிழ்த் தேசிய பிரதிநிதிகளை பேச வைத்து அவர்கள் மேலும் மேலும் பிளவுண்டு போவதை அமைச்சர் ஜெய்சங்கரின் ராஜதந்திரம் கண்டுகொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களில் தொடரும் வேலை நிறுத்தம்

**சி.கதீசனா**
( ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம் )

மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களில் ஒன்றாக வேலைக்குரிய சம்பளம் காணப்படுகின்றது. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சில பிரச்சினைகளால் அதாவது பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையில் ஏற்பட்ட மாற்றம், ஆகியன காரணமாக இலங்கையில் பல்வேறு துறைகள் சார்ந்த ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கோரி போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் சம்பள அதிகரிப்பு கோரும் போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் அண்மையில் மிக சாதாரணமாகவே நடைபெற்று வருகின்றது. இதில் ஒன்றாகவே பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்களின் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கல்வி சாரா ஊழியர்களின் சம்பளத்தில் 15 வீதம் குறைக்கப்பட்டமை, மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை, சம்பள அதிகரிப்பு, ஏனைய வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி மே மாதம் இரண்டாம் தேதி ஆரம்பித்த பணிப் பகிஷ்கரிப்பானது 50 நாட்களை கடந்த நிலையிலும் தொடர்கிறது. தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என்ற நிலைப்பாடு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தம்முடைய நகர்வுகளை அரசாங்கம் எடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.




**2016இல் தொடங்கிய இப் போராட்டம் இவ் வருடத்திலாவது நிறைவுக்கு வரவேண்டும். சம்பள விடயம் சார்பாக போராட்டம் நடாத்துவது மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிப்பதாக இருந்தாலும் இம்முறையேனும் தீர்வுடனே தீர்க்கமான முடிவுடனே முடிவுக்கு வரட்டும்.**

### கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளின் தொடக்கம்

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள கல்வி சாரா ஊழியர்கள் தொடர்ச்சியாக சம்பள இடர்பாட்டிற்கான தீர்வுகளை எட்டு வருடங்களுக்கு மேலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அமைச்சிடம் இது தொடர்பான கடிதங்கள் எழுதியும், பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் எந்த பயனும் இல்லாத காரணத்தினால் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டுள்ளனர். மோகன் டி செல்வா காலப்பகுதியில் அதன் பேரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2016 இற்கு பின் இன்று வரை அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு 107வீதத்தால் அதிகரித்த போதும் கல்வி சார்பற்ற ஊழியர்களுக்கு 93க்கு குறைவாகவே அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. 13. 03. 2023 மீண்டும் பகலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவருடனான சந்திப்பில் இது தொடர்பாக எடுத்துரைத்து தீர்வு காண்பதாக 2023.04.18 அமைச்சருடனான சந்திப்பில் ஒரு துணைக் குழு பரிந்துரை தேவை எனவும் அதற்கான பரிந்துரையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்படுத்தி ஒழுங்கு செய்யக் கூறியும் அது நடைபெறவில்லை. இவ்வாறாக பல தடவைகள் கலந்துரையாடியும் சாதகமான பதில்கள் கிடைக்காத போது 12.10. 2023 போராட்டம் மதிய போசன இடைவேளையில் ஏற்பாடு செய்யப்பட்டு எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டது.

10.10.2023 எழுதப்பட்ட கடிதத்திற்கு இணங்க 02.11.2023 ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இவ்வாறாக பல தடவைகள் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கப் பெறாத போது நியாயமான சம்பளம் முரண்பாடு சம்பள அதிகரிப்பு கோரிக்கைகளை எட்டு இடங்களுக்கு மேலாக கோரிக்கை விடுத்து பல உத்தரவாதங்கள் வாக்குறுதிகள் தரப்பட்டும் அவை நிறைவேற்றாது காலம் தாழ்த்து மிச்ச ஏற்பாட்டினால் அதிருப்தி அடைந்த ஊழியர்களினால் 2024 தொழிலாளர் தினத்திற்கு அடுத்த நாள் மதியம் 12 மணி அளவில் இருந்து இறுக்கமான முறையில் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.




பல்கலைக்கழகங்கள் என்றாலே போராட்டங்களுக்கு குறைவில்லை என்ற கருத்து சமூகத்திடையே இருந்து வருகிறது. மாணவர்கள், அரச ஊழியர்கள், ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்துவது என ...தா ஒரு வகையில் பல்கலைக்கழக க...வி சார்ந்த நடவடிக்கைகளில் பிரச்சினைகள் ஏற்படுவதை கூறிக்கொள்ளலாம். கடந்த சில வருடங்களில் கொவிட்-19 காரணமாக பல்கலைக்கழகக் கல்வி சார்ந்த நடவடிக்கைகள் தடைப்பட்டு மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். 3 வருடத்தில் முடிய வேண்டிய கல்வி4, 5 வருடங்கள் பிந்திச் சென்றதையும் எம்மால் அவதானிக்க முடிந்தது.

இந்தத் தொடர் போராட்டம் காரணமாக இலங்கையில் 17அரச பல்கலைக்கழகங்கள், மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பணிபகிஷ்கரிப்பையும் பொருட்படுத்தாது மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் வழங்கி வந்த சேவைகளையும் நிறுத்தி அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் முடக்கி சிலருக்கு பாடம் புகட்டவும் தயங்க மாட்டோம் என குறிப்பிட்டுள்ளனர். இதே வேளை 2024.06.19 முதல் பல்கலைக்கழகங்களிற்கு முன் சத்தியாக்கிரக போராட்டத்தினையும் முன்னெடுத்துள்ளனர்.

### மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள்

பல்கலைக்கழகங்களில் நடைபெறவுள்ள அனைத்துப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலை காணப்படுகின்றது. 3ம், 4ம் வருட மாணவர்களினால் கல்வி நடவடிக்கையின் முடிவுக் காலத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. பட்டமளிப்புக்களிற்கு பரீட்சைப் பெறுபேறுகளால் தடைப்பட்டுள்ளன. இதனைத் தவிர இந்த வருடம் கல்விப்பொதுத் தராதர உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்காக விபரங்கள் அடங்கிய கையேடு வெளியீடு நடவடிக்கையும் தாமதமாகி உள்ளது தற்போது வேலை நிறுத்தம் காரணமாக மாணவர்கள் நிகழ்நிலை முறையில் கல்வி கற்று வருகின்றனர்.




பல்கலைக்கழக செயற்பாட்டிற்கு கல்வி சாரா ஊழியர்களின் வகிபங்கு மிக அவசியம் அவற்றையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். தற்போது நடைபெறும் போராட்டம் இறுக்கமான முறையில் காணப்பட்டாலும் முதலாவது போராட்டம் என்ற வகையில் அனைத்து மக்களது கவனம் இருந்தாலும் 2016-ம் ஆண்டு முதலில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த அனைத்து பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனத்தின் போராட்டத்தின் தொடர்ச்சியே இது என கூறிக் கொள்ளலாம். 2016இல் தொடங்கிய இப் போராட்டம் 2024ம் ஆண்டாகியும் இவ்வருடம் பல்கலைக்கழகம் சார்ந்த கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் இவ் வருடத்திலாவது நிறைவுக்கு வரவேண்டும். சம்பள விடயம் சார்பாக போராட்டம் நடாத்துவது மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிப்பதாக இருந்தாலும் இம்முறையேனும் தீர்வுடனே தீர்க்கமான முடிவுடனே முடிவுக்கு வரட்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குத் தலைவர்களின் தேர்தல்கால வாக்குறுதிகளை தமிழ் மக்கள் நம்ப மறுப்பது ஏன்?

கந்தையா அருந்தவபாலன்



எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர்களது கட்சிகளால் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்ட சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திசநாயகவும் தாம் ஜனாதிபதியாக வந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் எவற்றைச் செய்வோம் என வாக்குறுதிகளை வழங்கிவரும் நிலையில் பொதுவேட்பாளராக களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் தான் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ மற்றும் விருந்தினர் நிகழ்வுகளில் தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருவதைக் காணமுடிகிறது. இவர்களால் குறிப்பாக சஜித் மற்றும் அனுர போன்றவர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகளைப் பொறுத்த மட்டில் நாட்டின் தெற்கில் ஒன்றாகவும் வடக்கில் வேறொன்றாகவும் காணப்படுவதுடன் சிலவேளைகளில் முக்கியமான விடயமொன்று வடக்கில் ஒருவிதமாகவும் தெற்கில் இன்னொரு விதமாகவும் கூறப்படுவதை அவதானிக்கலாம். தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் வரிச்சுமை, வாழ்க்கைச் செலவு, சம்பளம், ஊழல், பௌத்தம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றன தொடர்பாகப் பேசும் இவ்வேட்பாளர்கள் வடக்குக்கு வரும்போது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு முக்கியமளித்து கதைக்கின்றனர். குறிப்பாக தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் 13ஆவது திருத்தத்தின் உள்ளடக்கம் முழுவதையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக முன்மொழிகின்றனர். வடக்கில் இவ்வாறு அவர்கள் கூறும் சமகாலத்தில் தெற்கில் அதற்கு வேறுவகையான வியாக்கியானத்தை அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் மூலம் ஊடகங்களுக்கு சொல்ல வைக்கப்படுகிறது. உதாரணமாக வடக்கில் சஜித் 13ஆவது திருத்தத்தில் உள்ளவாறு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படும் என்று சொல்ல கொழும்பில் அவரது கட்சியைச் சேர்ந்த மரிக்கார் அது சமூகப் பாதுகாவலர் என்று வியாக்கியானப்படுத்துகிறார். அதேபோல வடக்கில் அனுர 13ஆவது முழுமையாக என்று கூறும்போது தெற்கில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் அது தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபையை சிறப்பாக இயங்க வைப்பது என வியாக்கியானம் செய்கின்றனர். எவ்வாறிருப்பினும் இத்தலைவர்கள் தமிழ்மக்களின் மனநிலை தொடர்பாக ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்துள்ளனர் என்பதை இதனூடாக அறிய முடிகிறது. அதாவது தமிழ் மக்கள் தமது அன்றாடப் பிரச்சினைகள், அபிவிருத்தி என்பவற்றைவிட அரசியல் தீர்வுக்கே கூடிய முன்னுரிமை அளிப்பர் என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதாகும். அதனால்தான் தமிழ் மக்களுக்கான தேர்தல் வாக்குறுதிகளாக 13 ஐ முழுமையாகத் தருவதாக வடக்கில் கூறி வருகின்றனர். ஆனால் இவர்களின் இந்த வாக்குறுதியை நம்புகின்ற நிலையில் பெரும்பாலான தமிழ் மக்கள் இல்லை என்பதே யதாரத்த நிலையாக உள்ளது. ஏனெனில் 13, 13பிளஸ் மட்டுமல்ல கடந்த காலத்தில் சிங்களத்தலைவர்களால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது, எவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தாம் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டோம் என்ற அரசியல் அறிவு தமிழ் மக்களிடம் நிறையவே இருப்பதனாலாகும். அதுமட்டுமன்றி இன்று இவ்வாறு வாக்குறுதி அளிக்கும் இவ்வேட்பாளர்கள் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பாகக் கொண்டிருந்த நிலைப்பாடு என்ன? இவர்களால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் எவை? என்பவை பற்றியும் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் வேட்பாளருமாகிய அனுரகுமார திசநாயக பற்றிய தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? தேசிய மக்கள் சக்தி என்பது கடந்த காலத்தில் மக்களால் நன்கறியப்பட்டிருந்த ஜே.வி.பியின் மறு வடிவம் என்பதை மக்கள் நன்கறிவர். இலங்கைத் தமிழர்களின் முதல் அரசியல் கட்சியாகக் கருதப்படும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அரசியல் செயற்பாடு காரணமாக அக்கட்சி மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் எதிர்மறை விம்பத்தை மறைப்பதற்காக எவ்வாறு அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என உச்சரிக்கப்படுகிறதோ அதே போலவே ஜே.வி.பியின் கடந்தகால ஜனநாயக விரோத செயற்பாடுகளால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்மறை விம்பத்தை மறைப்பதற்காக தேசிய மக்கள் சக்தி என அது உச்சரிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்றல்லாது, தேசிய மக்கள் சக்தி 'ஜாதிக மகஜன பலவேகய' என்ற பெயரில் தேர்தல் திணைக்களத்தில் பதியப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியாகும். என்னதான் புலி பசுத்தோல் போர்த்தாலும் அதன் இயல்பான குணம் மாறுவதில்லை என்பது போல தேசிய மக்கள் சக்தியினரின் தமிழருக்கு விரோதமான கொள்கையும் இந்திய விரோதப் போக்கும் மாறவில்லை என்பது தெளிவானது. அதன் தற்போதைய தலைவர் அனுரகுமார ஜே.வி.பியின் முன்னைய தலைவர்களைவிட முற்போக்கானவர் எனப் பலவழிகளில் தன்னைக் காட்ட முயற்சித்தாலும் அது தேர்தல் வெற்றிக்கான வேடமே அன்றி உண்மையான கொள்கை மாற்றமில்லை என்பதை அவரது சில வெளிப்பாடுகளும் அக்கட்சியின் ஏனைய தலைவர்களின் செயற்பாடுகளும் எண்பிக்கின்றன. எவ்வாறு இந்தியப் பிரதமரை ஆர்.எஸ்.எஸ் கொள்கையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதோ அதேபோலவே அனுரவை ஜே.வி. பியின் கொள்கைகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கெதிராக ஜே.வி.பி கொண்டிருந்த நிலைப்பாடும் வெளிப்பாடுகளும் மறைக்க முடியாதவை. குறிப்பாக 1978இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம், அதனடிப்படையில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தம், மாகாணசபை முறை என்பவை தொடர்பான அவர்களின் எதிர்வினையாற்றல்களை தமிழ் மக்கள் இன்னும் மறக்கவில்லை. இலங்கை- இந்திய ஒப்பந்தந்தைச் சாட்டாக வைத்து நாட்டில் அவர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும் இந்திய எதிர்ப்புச் செயற்பாடுகளும் இலங்கை வரலாற்றில் இரத்தக்கறை படிந்த பக்கங்கள். இதற்கு மேலாக சந்திரிகா அம்மையாரின் ஆட்சியின் பங்குதா[illegible] 2006 இல் மாகாணசபை முறைமையில் ஒன்றிணைந்திருந்த தமிழர் தாயகத்தை உயர்நீதிமன்றில் வழக்கிட்டு பிரித்த பெருமையும் இவர்களைச் சார்ந்ததே. அதற்கு அனுரகுமார அண்மையில் கூறிய காரணம் அது அரசியலமைப்பிலுள்ளதை நடைமுறைப்படுத்துவதற்கானது என்பதாகும். அதே அரசியலமைப்பில்தான் காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய மாகாணசபை முறைமை உள்ளதே அதனை ஏன் அமுல்படுத்த முனையாது எதிர்த்தீர்கள் என்ற தமிழர்களின் கேள்விக்கு அனுரவிடம் எந்தப் பதிலும் இல்லை. சென்ற மாதம் வரை தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை என்று எதுவுமில்லை, இருப்பது வெறும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே, அவற்றுக்குத் தீர்வு கண்டால் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடும், மாகாணசபை முறைமை தேவையற்றது, அது ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்த அனுரகுமார இந்தமாதம் யாழ்ப்பாணம் வந்து 13ஐ முழுமையாகத் தான் தருவேன் என்று கூறுவதை ' எருமைமாடு ஏரோப்பிளேன் ஓட்டியதாம்' என்பதை நம்பும் தமிழர்கள் இருந்தால் அவர்கள் தான் அதை நம்புவார்கள். தங்களைத் தாங்களே முற்போக்கான இடதுசாரிகள் எனக்கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அண்மையில் இலண்டனில் அரசியலமைப்பில் பௌத்த மதத்தின் முன்னுரிமை பற்றி என்ன கூறினார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். இவர்கள் கூறிவரும் அரசியலமைப்பு மாற்றம் என்பது தமிழர்களைப் பொறுத்து இப்போதிருக்கும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைவிட மோசமான ஒரு கட்டமைப்பாகவே இருக்கும் என்பதைத் துணிந்து கூறமுடியும். சிவப்புச் சட்டை போடுவதால் மட்டும் தேசிய மக்கள் சக்தியினர் முற்போக்கான இடது சாரிகள் என நம்புவதற்குத் தமிழர்கள் தயாராக இல்லை.

அடுத்தவர், ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இதுவரை முன்னிலை வகிப்பதாகக் கருத்துக்கணிப்புகள் கூறும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள். ஜே,ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் பிரதமராக இருந்து கொண்டு 1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்த்ததுடன் அவ்வொப்பந்த நிகழ்வையே புறக்கணித்து தனது வெறுப்பை வெளிப்படையாக உமிழ்ந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அரசியல் வாரிசு இவர். அதுமட்டுமன்றி 13ஆம் திருத்தத்துக்கமைய மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பிடுங்கி எடுக்கக் கால்கோள் இட்டவரும் இந்த பிரேமதாஸாவே என்பதை தமிழர்கள் நன்கறிவர். இந்தவிடயத்தில் தகப்பனைப் போல பிள்ளை இருப்பார் என நாம் எண்ணுவது தவறு என்றாலும் இல்லை நீங்கள் எண்ணுவது சரி என்பது போலவே சஜித்தின் கடந்த கால வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. இதற்குச் சில எடுத்துக்காட்டுகளை சுட்டுவது பொருத்தமாக இருக்கும். ஒன்று நல்லாட்சிக்காலத்தில் (2015-2019) அரசியலமைப்பை மாற்றப்போவதாகக் கூறி பாராளுமன்றத்தை அரசியலமைப்புப் பேரவையாகப் பிரகடனம் செய்து ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்று ரணில்- சுமந்திரன் கூட்டணி நாடகமாடியபோது மூத்த அமைச்சர் என்ற வகையில் அது நாடகம் என்று அறிந்திருந்தும் "தற்போதுள்ள 13 க்கு மேல் எதையும் அனுமதிக்க முடியாது" என எதிர்த்து அறிக்கை வெளியிட்டவரே இந்த சஜித். அவர் குறிப்பிட்ட 13 என்பது அதிகாரங்கள் பிடுங்கப்பட்ட தற்போதைய மாகாண சபையையே. மற்றது அந்த நல்லாட்சிக் காலத்தில் வடக்குக் கிழக்கிலுள்ள 1000 பௌத்த விகாரைகளினைப் புனரமைப்புச் செய்வதற்காக வரவு செலவுத் திட்டத்தில் பல கோடி ரூபாக்களை ஒதுக்கியது. அதன் விளைவுகள இப்போது தமிழ் மக்கள் அனுபவித்து வருவது கண்கூடு. இதுபோன்ற மிகப் பிந்திய ஒரு உதாரணம் தான் யாழ்ப்பாணத்தில் சஜித் 13 இலுள்ள பொலிஸ் அதிகாரம் தருவதாகக் கூற கொழும்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அது பொலிஸ் அல்ல சமூகப் பாதுகாவலர் என ஊடகங்களுக்குத் தெரிவித்தமை. இந்த இரட்டை வேடங்களைத் தமிழர்கள் அறியாதவரல்லர். இவற்றுக்கு மேலாக கடந்த இரு மாதங்களுக்கு முன்வரை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன் தினம் பாராளுமன்றில் சஜித் பற்றியும், 13 ஐ சஜித் முழுமையாகக் கொடுப்பதற்கு அது என்ன அவரது அப்பன் வீட்டுச் சொத்தா என கேட்டது பற்றியும் தமிழர்கள் நன்கறிவர். இவருக்குத்தான் 2010 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தார்கள் என்பதற்கு மக்களை நோவதா? தமிழ்த் தலைவர்களை நோவதா? சரத் பொன்சேகாவைப் போலவே தமிழினப்படுகொலையில் ஈடுபட்ட பல இராணுவத் தளபதிகள் இப்போது சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியில் சங்கமமாகி உள்ளனர். சஜித் என்ன வேடம் போட்டாலும் அவரது கொள்ளகையை அவரது கட்சியினர் வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த இலட்சணத்தில் 13 ஐ முழுமையாகத் தான் தருவேன் என வாக்குறுதி அளிக்கும் சஜித்தை தமிழ் மக்கள் எவ்வாறு நம்ப முடியும்?

அடுத்தவர், இன்னும் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்காது, ஆனால் அதற்கான காய் நகர்த்தல்களைத் திட்டமிட்டு அரங்கேற்றிவரும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா அவர்கள். அரசியலில் தனது பெரிய தகப்பனாரை விஞ்சிய ஒரு குள்ளநரி என தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தினால் சரியாக முத்திரை குத்தப்பட்ட ஒருவர். தமிழர்களின் முதுகில் குத்தாமல் குத்துவது எப்படி என்ற கலையை நன்கறிந்த, மேலைத்தேச உடையில் கனவான் போலக் காட்சிதரும் காவியுடையற்ற தீவிர சிங்கள பௌத்த துறவி. விடுதலைப் புலிகளிடமிருந்து கருணாவைத் தானே பிரித்தேன் என்றும் அதன்காரணமாவே விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடிந்தது என்றும் மார்தட்டிய வீரன். இனப்பிரச்சினைக்கு இதுவரை முன்மொழியப்பட்ட தீர்வுகளில் சிறந்த ஒன்றாகக் கருதப்படும் சந்திரிகா அம்மையாரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவை கடுமையாக எதிர்த்ததுடன் பாராளுமன்றத்திலேயே அதன் நகலை அவரது கட்சி உறுப்பினர்கள் கொழுத்துவதற்கு வித்திட்ட பெருந்தகை இவர். இதுபோன்ற பல விடயங்கள் இவரின் கடந்த கால தமிழர் விரொதச் செயற்பாடுகளை எடுத்துக்காட்டுவன. சென்ற வருடத்தில் இவர் 13 ஐ உச்சரித்த போது தென்னிலங்கையில் எழுந்த கடும் எதிர்ப்பால் அதனைக் கைவிட்டதுடன் அந்த பட்டறிவுடனும்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி. கந்தராஜாவின் ‘அகதியின் பேர்ளின் வாசல்’

சிறப்பான வரலாற்றுச் சம்பவங்களை சுவைபடச் சொல்கிறது இந்நாவல். நான் யேர்மனியில் வாழ்ந்தாலும் கடந்த கால அரசியல் வரலாறுகளை, இந்நாவல் மூலமே தெரிந்து கொண்டேன். இறுக்கமான நெருக்கமான பாத்திரப் படைப்புகள். ஏரோபுளட் விமானத்தில் வெளிநாடு வந்தவர்களில் நானும் ஒருவன். எதுவுமே தெரியாது காட்டிவிட்ட நண்பனின் குறிப்பினால் தட்டித்தவறி வந்து சேர்ந்ததே உண்மை. வெறும் ரிக்கற் பணம் மாத்திரமே அப்போது செலவானது. அதுவும் பத்தாயிரத்து ஐநூறு இலங்கை ரூபா. அந்த வேளையிலும் பல்லாயிரம் கொடுத்து வந்தவர்கள் அதிகம். பிரயாண முகவர்களின் இனிப்பான பேச்சுகளை நம்பி ஏமாறியவர்கள் ஏராளம். பலர் பணையம் வைத்து மருந்துக் கடத்தலில் ஈடுபடுத்தப்பட்டு சிறையில் வாடினார்கள். கிழக்கு யேர்மனியில் தந்த ஒருநாள் விசாவை நம்பியே எங்களுடைய வாழ்க்கை இருந்திருக்கிறது. ஆழமாகச் சிந்திக்காததால் எந்தப்பயமுமின்றி வந்து சேர்ந்தோம்.

இந்த நாவலின் ஆசிரியர் கிழக்கு ஜேர்மனியிலும் மேற்கு ஜேர்மனியிலும் படித்ததனால். தான் கண்டதையும் சந்தித்தவற்றையும் சம்பவங்களாக சுவைபட இறக்கி வைத்திருக்கிறார். கதையின் பாலமுருகன் இவர்தானோ என நான் நினைத்தே வாசித்தேன். இங்கிலாந்தில் வாழும் சித்திரலேகா எப்படி இருப்பார் என்பதை பார்க்க நானும் விரும்புகிறேன். எண்பது காலப் பகுதியில் புலம்பெயர்ந்தவர்களால் ஏற்பட்ட பிரச்சனைகள் அவர்கள் சந்தித்த சோதனைகள் போதை மருந்துக் கடத்தல் அரசியல் மாற்றங்கள் அனைத்தையும் சொல்கிறது இந்நாவல்.

யேர்மனியில் படித்துப்பட்டம் பெற்று பேராசிரியரான ஆசி கந்தராஜா அவர்களுக்கு எழுத்துக்கள் கைவந்த கலை. இந்த நாவலிலுள்ள இன்னுமோர் சிறப்பு பொட்ஸ்டம் உடன் படிக்கை பற்றிய விரிவான விளக்கத்தை தெரிந்து கொண்டது. பாலமுருகனின் நண்பன் தவராசாவின் பாத்திரம் எதிர் பாராத திருப்பத்தைத் தந்தது. ஆசிரியருக்கு எனது பாராட்டுகள்.




**பொன். புத்திசிகாமணி, ஜேர்மனி.**

# ‘மலையகம்: இங்கிருந்து எங்கே?’ பீ. மரியதாஸின் மலையக வெளிப்பாடுகள்

பீ. மரியதாஸ் எழுதிய பதினெட்டு கட்டுரைகளைத் தாங்கி, ‘மலையகம்: இங்கிருந்து எங்கே?’ என்ற நூல், கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில் வெளிவந்துள்ளது. மலையக சமூகத்தின் உருவாக்கம், மலையக தேசியம், மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், மலையகத்தின் கல்வி நிலை, சுகாதாரம், வீடமைப்பு, மலையக நாட்டார் பாடல்கள் என்று மலையகத்தின் அனைத்து அம்சங்களையும் சார்ந்த கட்டுரைகளைக் கொண்டதாக இந்நூல் 208 பக்கங்களில் அமைந்துள்ளது. மரியதாஸின் பெற்றோர் சாமுவேல் சூசை பீட்டர், அன்னக்கிளி ஆகியோருக்கும் அவரது சகோதரர்களுக்கும் இந்த நூல் சமர்ப்பணமாகியுள்ளது.

தான் உருவான மலையகச் சூழல், தனக்கு வழிகாட்டிகளாக இருந்த ஆசிரியர்களான இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன், பி. ஏ. செபஸ்டியான், கட்சித் தோழமைகள், நண்பர்கள் என்று அனைவருக்கும் நன்றிகூறும் பெரும் பண்பினை மரியதாஸ் இந்த நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

‘மலையகம் அவரது சுவாசம். அந்த மக்களின் வாழ்வும் வளமும் அவைது ரத்த நாளத்தோடு உறைந்தது. அந்த மண்ணின் சோக ராகத்தை அவர் நெஞ்சில் சுமந்து திரிபவர். மலை முகடுகளில் நம்மவர் படும் அவலம் அவர் நெஞ்சக் கணப்பறையில் என்றும் கனன்று கொண்டிருப்பது. முதலாளித்துவம் எங்கள் ஈரலைப்பிடுங்கி வைத்தாலும் திருப்தி கொள்வதில்லை என்பதை அவர் கண்கூடாகக் கண்டவர். முதலாளித்துவ சுரண்டலும் இன வன்முறையும் நம் சமூகத்தைச் சூறையாடி வருவதை உணர்பவர். இந்த அநியாயத்தை எதிர்க்கும் சின்ன முனகலையும் அவரால் கேட்க முடிகிறது’ என்கிறார் மலையகத்தின் மூத்த விமர்சகர் மு. நித்தியானந்தன். இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகியோரின் செரும் முயற்சியினால் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் க. பொ. த. உயர்தர வகுப்பு 1963ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு முதன்முதலாக பீ. மரியதாஸ். செ. நவரட்ண, எம். வாமதேவன் ஆகிய மூவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். அவர்களில் ஒருவரே இந்நூலின் ஆசிரியர் பீ. மரியதாஸ். அக்காலப் பகுதியில் விரல்விட்டு எண்ணக்கூடிய மலையக மாணவர்களே பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் பயின்றனர். பல்கலைக்கழக வாழ்க்கையில் பீ. மரியதாஸ் தனது அறிவுப்புலத்ஹத விரிவாக்கிக்கொண்டதோடு, இடதுசாரிச் சிந்தனைகளால் கவரப்பட்டு மார்க்சிச சிந்தனைகளிலும் தீவிரமாக இயங்கத் தொடங்கினார் என்று பதிவு செய்திருக்கிறார் எச். எச். விக்கிரமசிங்க.

தமிழகத்தின் அரூப ஓவியப் பெருங்கலைஞர் ஏ. விஸ்வம் வரைந்த தைலவண்ண ஓவியம் ,ந்நூலின் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது. இந்நூலின் வெளியீட்டு விழா ஹட்டன், ராகலை ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கிறது.

**- மரதன் கிருஷ்ணன்.**

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**பா. சதீசன்,**
**கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்தபோதும், தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் தமிழ் அரசுக்கட்சி தமது இரண்டுபட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாமே. ஒரு ராஜதந்திரி முன்பாகவும் இப்படி நமது உள்வீட்டுப்பிரச்சினையை வெளிப்படுத்தியது சரியானதா?

**வியுக்தியார்:** என்ன செய்வது இவர்களைத்தான் நாம் இதுவரை எமது பிரச்சினைகளை எல்லாம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் தீர்த்துவைப்பார்கள் என்றும் நம்பிக் கொண்டிருந்திருக்கின்றோம். அதுவிடயம் தொடர்பாக அவர் கேட்டபோது, இன்னமும் நாங்கள் எல்லோரும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரவில்லை. பேச்சுமட்டத்தில் தான் அந்த விவகாரம் இருக்கின்றது என்று நாகரீகமாக பதில் சொல்லியிருக்கலாம். பாடசாலை வகுப்பறையில் ஆசிரியர் ஒரு கேள்வி கேட்டால் மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்து பதில் சொல்வதுபோல சொல்லியிருக்கிறார்கள் நமது அரசியல் ‘மாணவர்கள்”. இவர்களை தலைவர்கள் என்று இப்போதும் நம்மில் சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

---

**கே. இரவிந்திரராசா,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள 3 பிரதான வேட்பாளர்களும், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளதால், உடனடியாக மாகாணசபை தேர்தலை நடத்தவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளாரே. பிரதான வேட்பாளர்கள் மூவரும் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகினால் மாத்திரமே செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாகாண சபைக்கு தேர்தல் நடத்தவேண்டும் என்றால், அது சாத்தியப்படக்கூடியதா?

**வியுக்தியார்:** மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்பது அவசியமானதுதான். ஆனால் இன்றைய நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அது சாத்தியமானதில்லை என்பதை அறியாதவர் அல்ல சித்தார்த்தன். ஆனால், அவர் மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தக்கோருவதற்கு பதிலாக, மாகாணசபைத் தேர்தல் நடாத்தவேண்டும் என்றால் பழைய முறையில் தேர்தல் நடாத்தலாம் என்று பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றவேண்டும். அந்த சட்டப்பிரேரணையை ஏற்கனவே சுமந்திரன் எம். பி. பாராளுமன்றில் சமர்ப்பித்து அது தயாராக இருக்கின்றது. அதனை இப்போதே நிறைவேற்றினால், ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்ததும், மாகாணசபைகளுக்கு தேர்தல்களை நடாத்தலாம். அந்தக் கோரிக்கையைத்தான் பிரதானமாக தனது பேச்சில் சித்தார்த்தன் வலியுறுத்தியிருந்தார். அவரது இந்தக் கோரிக்கையை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஒரே குரலில் வலியுறுத்தவேண்டும். அதனைச் செய்யாமல் யாரும் வடக்குக்கு தமிழ் மக்களிடம் வாக்குகேட்டு வராதீர்கள் என்று அழுத்தமாக சொல்ல வேண்டும்.

---

**தி. சதீஸ்குமார்,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

**கேள்வி:** இந்திய முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும், அதற்காக எந்த தரப்புடனும் இணைந்து செயல்படதான் தயாராக உள்ளார் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் சொல்லுகின்ற இந்திய முறையிலான தீர்வு என்பதைத்தானே நமது தமிழ் கட்சிகளும் பல தசாப்தங்களாக் கேட்டுக்கொண்டிருகின்றன. இந்திய ஆட்சி முறை என்பது கிடத்தட்ட சமஷ்டி முறையிலானதுதான். சமஷ்டி என்றால் சிங்களவர்கள் பயப்படுகின்றார்கள் என்பதால் இந்திய முறை என்று அவர் அழைப்பது நல்லதுதான். ஆனால் அந்த தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு தான் ஆதரவளிக்க தயார் என்பதுதான் கொஞ்சம் ஓவரா இருக்கின்றது. இவரது ஒரு வாக்கிற்காக- யாராவது அந்த தீர்வை முன்வைப்பார்களா என்றுமல்லவா அவர் யோசிக்கவேண்டும். எந்தத்தரப்புடனும் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக கூறும் சங்கரி ஐயா, முதலில் தனது கட்சிக்காரர்களுடன் இணைந்து பயணிக்கவேண்டுமே.

---

**த. பிரதீபன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**


**கேள்வி:** தமிழ் மக்கள் மாத்திரமல்ல வடக்கு- கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களும் எதிர்கால தேர்தலை ஒற்றுமையாக பகிஸ்கரிக்கவேண்டும் என்பதே தமது கருத்தாகும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்திருக்கிறாரே. அவருக்கு திடீரென்று என்னதான் நடந்தது?

**வியுக்தியார்:** அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றியது சரியான நடவடிக்கை என்று வாதிட்டவர்களில் அவரும் ஒருவர். அவர் இப்போது தமது தேர்தல் பகிஷ்கரிப்பு கோரிக்கையை ஏற்று முஸ்லிம்களும் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும் என்றிருக்கிறார். நான் நினைக்கின்றேன், இப்படி ஒரு கோரிக்கை விடுத்தால், வடக்கு கிழக்கில் தேர்தலில் வழக்கமதாக வாக்களிக்காமல் விடுகின்றவர்கள் எல்லோரும் தமது கோரிக்கை எற்றுத்தான் வாக்களிக்கவில்லை என்று சொல்ல வசதியாக இருக்கும் என்று நினைத்தாரோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட கொரிய அதிபர் கிம் உடன் சந்திப்புகளால் இன்று புடினும் - அன்று டிரம்பும் சாதித்தது என்ன?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



தற்போது வடகொரிய தலைவரை ரஷ்ய அதிபர் புட்டின் சந்தித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைப்போல, முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் இடையிலான சந்திப்பு 2019 பிப்ரவரி இறுதியில் வியட்நாமில் நடைபெற்றது.

இதில் என்ன தற்பாரியம் உள்ளதென்றால், இருவருமே தமது ஆளுமைக்குள் வட கொரியாவை வைத்திருக்க வேண்டும் என்பதே. தீபகற்கமான கொரியாவில் நீண்டகாலமாக போர்ப் பதற்றம் எப்போதும் நிலவுகிறது. இரு வல்லரசுகளும் தங்கள் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கொரிய தீபகற்பத்தை கட்டுப்படுத்த முயல்கின்றன என்பதே உண்மையாகும்.

**புட்டினின் வடகொரிய விஜயம் :**

அமெரிக்காவின் பொருளாதார அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், இராணுவ அச்சுறுத்தல்கள் போன்றவற்றிற்கு மத்தியில் தனது நலனை பாதுகாப்பதற்காக வடகொரியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு புட்டின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

24 வருடங்களிற்கு பின்னர் புட்டின் வடகொரியாவிற்கு சென்று இவ்வாறு தெரிவித்துள்ளார். உக்ரைனிற்கு எதிரான ரஷ்யாவின் யுத்தத்திற்கு உறுதியான ஆதரவை வழங்குவதற்காக வடகொரியாவிற்கு புட்டின் நன்றியும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பரில், வடகொரியாவுக்கு வரும்படி புட்டினை வட கொரிய தலைவர் கிம் ஜாங் -உன் அழைத்திருந்த நிலையில், புட்டின் இந்த சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்.

**பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து:**

கடைசியாக, 2000-ம் ஆண்டு ஜூலையில், வடகொரியாவுக்கு புட்டின் பயணம் மேற்கொண்டார். 24 ஆண்டுகளுக்கு பிறகு ரஷ்ய அதிபரும், வட கொரிய தலைவரும் சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது, இருதரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்துவது மற்றும் பல்வேறு முக்கியமான பிரச்னைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர். இந்த ஆலோசனையின் முடிவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அத்துடன் மேற்குநாடுகளால் கட்டுப்படுத்தப்படாத பொருளாதார பாதுகாப்பு முறையை வடகொரியாவுடன் இணைந்து உருவாக்குவேன் என்றும் புட்டின் தெரிவித்துள்ளார்.

மேலும் நீதிக்கான பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் பன்முனைப்படுத்தப்பட்ட உலக ஒழுங்கை ஸ்தாபிப்பதை தடுக்கும் மேற்கத்தைய இலட்சியங்களை ரஷ்யா உறுதியாக எதிர்க்கும் என ரஷ்ய அதிபர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

**வடகொரிய ஆயுதங்களை பெறும் ரஷ்யா:**


உக்ரைன் மீது நடத்தப்படும் போரில் வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை பெற வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு உள்ளது. உக்ரைனில் ரஷ்யா நடத்தி வரும் போர், முன்னெப்போதையும் விட இரு தலைவர்களிடையே நெருக்கமான நட்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த வகையிலும் புட்டின் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அத்துடன் தத்தமது நாடுகளை யாராவது தாக்கினால் இணைந்து செயல்படுவோம் ரஷ்யா - வட கொரியா அதிபர்கள் ஒப்பந்தம் இட்டுள்ளனர். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள், தங்களுக்கு எதிராக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ள ரஷ்யா மற்றும் வட கொரியா, யாராவது தாக்குதல் நடத்தினால், ஒருவருக்கு ஒருவர் உதவிக்கரம் நீட்டுவது என்று ஒப்பந்தம் செய்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யா போருக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து, பொருளாதார தடையையும் விதித்துள்ளன. ஆயினும் உக்ரைன் போர் விவகாரத்தில், ரஷ்யாவுக்கு வடகொரியா ஆதரவு தெரிவித்துள்ளது.

**வடகொரிய அணு ஆயுத பலம்:**

வடகொரியாவின் அதிபர் கிம் ஜாங் உன், உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறி, தொடர்ந்து அணு ஆயுதங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இரும்பு கோட்டையாக விளங்கும் வட கொரியாவின் அசைக்க முடியாதத் தலைவராக கிம் ஜாங் உன் உள்ளார்.



பல புதிய ஏவுகணைகளை, அணு ஆயுதங்களை தொடர்ந்து தயாரித்து வருகிறார். அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு அந்த நாடு நேரடியாக பலமுறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவுக்கு எதிராக, ஐ.நா., பொருளாதார தடை விதித்துள்ளது. அது போல பல நாடுகளும் பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில், வடகொரியாவுக்கு, ரஷ்ய அதிபர் புட்டினின் விஜயம், உக்ரைனுக்கு எதிரான போரில் அதற்கு தேவையான ஆயுதங்களை வட கொரியாவிடம் இருந்து பெறும் நோக்கத்துடன் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கு பதிலாக, வட கொரியாவுக்கு, அணு ஆயுதங்கள் உள்ளிட்டவை தயாரிப்பதற்கான தொழில் நுட்பங்களை ரஷ்யா வழங்கும் என்றும் கூறப்படுகிறது.

**டிரம்ப் - கிம் 2019 சந்திப்பு:**

தற்போது வடகொரிய தலைவரை புட்டின் சந்தித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைப்போல, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப், வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் இடையிலான சந்திப்பு 2019 பிப்ரவரி இறுதியில் வியட்நாமில் நடைபெற்றது.

கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத ஒழிப்பில் ஈடுபடுவதற்கான திட்டங்கள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடி, இரு நாட்டு தலைவர்கள் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அப்போதய அமெரிக்க பாதுகாப்பு செயலர் மைக் பாம்பியோ மற்றும் கிம்மின் மூத்த ஆலோசகர் கிம் யாங் - சோல் ஆகியோர் இச்சந்திப்பில் உடனிருந்தனர்.

இதற்கு முன்னர் 2018 ஜூனில் அமெரிக்க அதிபரும், வட கொரிய அதிபரும் சிங்கப்பூரில் சந்தித்தனர்.

சிங்கப்பூரில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உச்சி மாநாட்டுக்கு பின்னர், அணு ஆயுத ஒழிப்பில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இதன் பின்னரான வியட்நாம் சந்திப்பிலும் அணு ஆயுதத்தை முழுமையாகக் கைவிடுவது மற்றும் பொருளாதார தடைகளை திரும்பப் பெறுவது தொடர்பாக முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இருதரப்புக்கும் இடையே எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. வடகொரியா மீதான பொருளாதார தடையை முழுமையாக நீக்க வேண்டும் என கிம் கூற டிரம்ப் அதை ஏற்காததால் இந்த சந்திப்பும் தோல்வியில் முடிந்தது.

---

# தலாய்லாமாவை சந்தித்த அமெரிக்க குழு: சீனா-திபெத் பிரச்னையின் வரலாறு என்ன?


திபெத்திய மதத் தலைவர் தலாய் லாமாவைச் சந்திப்பதற்காக, அமெரிக்காவின் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசி உள்ளிட்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் குழு ஒன்று இமாச்சல பிரதேசத்தில் உள்ள தரம்சாலாவுக்கு சென்றிருந்தது.

அமெரிக்காவின் ஏழு பேர் கொண்ட இந்தக் குழு வியாழக்கிழமை (ஜூன் 20) புத்த மதகுரு தலாய் லாமாவைச் சந்தித்தது. இந்தச் சந்திப்பின்போது, சீனா-திபெத் பிரச்னை தொடர்பாகச் சமீபத்தில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டச் சட்ட மசோதா குறித்து விவாதிக்கப்பட்டது.

ஆனால், இந்தச் சந்திப்பிற்கு அதிருப்தி தெரிவித்துள்ள சீனா, திபெத்தை சீனாவின் ஒரு பகுதியாக ஏற்கும் உறுதிமொழியை அமெரிக்கா மதிக்கவில்லை என்றால், சீனா 'கடுமையான நடவடிக்கைகளை' மேற்கொள்ளும் என்று எச்சரிக்கும் வகையில் கூறியுள்ளது.

இந்த வேளையில் சீனா- திபேத் பிரச்சினையின் வரலாற்றை பார்ப்போம்.

சீனாவுக்கும் திபெத்துக்கும் இடையேயான சர்ச்சை, திபெத்தின் சட்ட அந்தஸ்து தொடர்பானது. 13-ஆம்



நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து திபெத் தனது ஒரு பகுதியாக இருந்து வருவதாக சீனா கூறுகிறது.

ஆனால் திபெத்தியர்கள், பல நூற்றாண்டுகளாகவே திபெத் ஒரு சுதந்திர நாடாக இருந்து வருவதாகவும், அதன் மீது சீனாவுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை என்றும் கூறுகின்றனர்.

மங்கோலிய மன்னர் குப்லா கான், யுவான் வம்சத்தை நிறுவி, தனது பேரரசை திபெத் மட்டுமின்றி சீனா, வியட்நாம், கொரியா ஆகிய நாடுகளுக்கும் விரிவுபடுத்தினார்.

பின்னர் பதினேழாம் நூற்றாண்டில், சீனாவின் சிங் வம்சம் திபெத்துடன் உறவுகளை ஏற்படுத்தியது. 260 ஆண்டுகள் உறவுக்குப் பிறகு, சிங் ராணுவம் திபெத்தைக் கைப்பற்றியது.


ஆனால் மூன்று ஆண்டுகளுக்குள் அவரது ஆட்சி திபெத்தியர்களால் வெளியேற்றப்பட்டது. 1912-இல் பதின்மூன்றாவது தலாய் லாமா திபெத்தின் சுதந்திரத்தை அறிவித்தார்.

பின்னர் 1951-இல், சீன ராணுவம் மீண்டும் திபெத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியது. திபெத்தின் இறையாண்மை சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கூறி திபெத்திய தூதுக் குழுவை நிர்பந்தித்தது. 1959-ஆம் ஆண்டு இந்தியா வந்த தலாய் லாமா, திபெத்தின் சுயாட்சிக்காகப் போராடி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக திருகோணமலையை மாற்ற முடிவு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

திருகோணமலையை எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, முதலீட்டு வலயங்களை நிர்மாணிப்பதன் மூலம் திருகோணமலை துறைமுகம் வங்காள விரிகுடாவில் ஒரு பிரதான துறைமுகமாக மாறும்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற 31 ஆவது அகில இந்திய பங்காளித்துவக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, இந்தியாவுடன் சிறப்பான பங்காளித்துவத்துடன் தொடர எதிர்பார்த்துள்ளோம்.

வலுசக்தித் துறை தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான பங்காளித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 30 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு புதிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையில் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவையும் இலங்கை மீதான உங்கள் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது. கடினமான கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் இந்தியா வழங்கிய 3. 5 பில்லியன் டொலர் கடன் உதவி, எமக்குப் பலமாக அமைந்தது. அந்தப் பணத்தைத் திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பங்களாதேஷ் எங்களுக்கு வழங்கிய 200 மில்லியன் டொலர் கடனை நாங்கள் ஏற்கனவே செலுத்திவிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் குழுவுடனான பேச்சுகளை வெற்றிகரமாக முடித்துள்ளோம். எங்களின் உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு, அடுத்த வாரம் கூடவுள்ளது. எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள், பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஆகிய தரப்பினரை சந்திக்க நாங்கள் தயாராகவுள்ளோம். மேலும், சீனா மற்றும் சீனா எக்சிம் வங்கியுடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

இதன் பிறகு, எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும், சீனாவின் எக்சிம் வங்கியுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக உள்ளோம். இதன்படி, வரும் புதன் கிழமை உத்தியோகபூர்வ கடனாளிகள் குழுவை சந்திப்போம். அடுத்த வாரம் அல்லது அதற்குள், ஒரு நாடாக நாம் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு அடுத்த கட்டத்துக்கு செல்ல முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால், இத்துடன் இந்தப் பிரச்னை முடிந்துவிடாது. நாட்டில் மீண்டும் ஒரு பொருளாதார சரிவைத் தவிர்க்க வேண்டுமாயின், புதிய பொருளாதார பொறிமுறைக்கு நாம் துரிதமாக மாற வேண்டும். அது ஒரு போட்டி மிக்க, டிஜிற்றல் ஏற்றுமதி சார்ந்த பசுமைப் பொருளாதாரமாக இருக்க வேண்டும். அது நமக்குள்ள இரண்டாவது பொறுப்பு. எனவே, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை சட்டப்பூர்வமாக்க புதிய அணுகுமுறைக்குச் செல்ல முடிவு செய்தோம்.

மேலும், வெளிநாட்டு முதலீடு, ஏற்றுமதி வருமானம் மற்றும் பல பரிமாண வறுமையைக் குறைப்பதற்கான அளவுகோல்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பிராந்தியத்தில் அவ்வாறு செய்யும் முதல் நாடு இலங்கை என்று நான் நம்புகிறேன்.

ஒரு அரசாங்கம் பொருளாதாரக் கொள்கையை முன்வைத்தவுடன், அடுத்து வரும் அரசாங்கம் நிச்சயமாக அந்தக் கொள்கையை மாற்றியமைக்கின்றது. அப்போது நாம் ஒரு நாடாக முன்னேற முடியாது. நாங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பொருளாதார மாற்ற சட்ட மூலம், நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டுள்ளது. நாங்கள் தயாரித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு மேலதிகமாக, முதலீட்டு சபையின் செயல்பாடுகளுடன் முழுமையான முதலீட்டு செயல்முறையையும் நிர்வகிக்கும் பொருளாதார ஆணைக்குழு போன்ற புதிய நிறுவனங்களும் இந்தச் சட்டத்தின் மூலம் நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைமார்க்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவது குறித்தும் நாம் விரிவாகக் கலந்துரையாடினோம். திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தில் கைத்தொழில்களுக்கான முதலீட்டு வலயங்களும் உள்ளடங்கும். அதேபோன்று சுற்றுலாப் வலயத்தையும் கொண்டுள்ளது. மேலும் நாகப்பட்டினத்தில் இருந்து திருகோணமலைக்கு எண்ணெய் குழாய் அமைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அது தொடர்பான இறுதி கண்காணிப்பு அறிக்கைக்காக காத்திருக்கிறோம்.

மேலும், திருகோணமலையை எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக மாற்ற எதிர்பார்ப்பதுடன், துறைமுகங்கள் மற்றும் முதலீட்டு வலயங்களை நிர்மாணிப்பதன் மூலம் திருகோணமலை துறைமுகம் வங்காள விரிகுடாவில் ஒரு பிரதான துறைமுகமாக மாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இன்று, முழு கிழக்கு கடற்கரையும் சுற்றுலாத்துறைக்காக திறக்கப்பட்டுள்ளது. காலி மற்றும் தெற்கு பிரதேசங்களில் ஹோட்டல்களுக்கு மேலதிக காணிகள் வழங்கப்படுகின்றன. நாட்டில் புதிய முதலீட்டு வலயங்கள் திறக்கப்படும். எமது தொழிற் பயிற்சித் திட்டமும் விரிவுபடுத்தப்படுகிறது. எனவே, இந்தத் திட்டங்களில் இந்தியாவுடன் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறோம் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(எ)

# தெற்குத் தலைவர்களின்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் தீவிர பௌத்த சிங்களவரின் வாக்கினைச் சுருட்டுவதற்காகவும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்படாது என நேர்மையாகக் கூறி வருபவர். அதேவேளை காணி, பொலிஸ்அதிகாரத்தினுள் தனது எதிராளிகளைச் சிக்கவைக்க முனைபவர். அவ்வாறான ஒரு முயற்சிதான் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது சஜித் காணி, பொலிஸ் அதிகாரத்தைத் தருவதாகக் கூறியதை உண்மையா என உறுதிப்படுத்துமாறு விக்னேஸ்வரனிடம் கேட்டுக் கொண்டமை.

புனயப்பட்ட பல கற்பனைக் கதைகளின் மூலம் சிங்கள மக்களிடையே ஊட்டி வளர்க்கப்பட்ட பௌத்த சிங்கள மேலாண்மை சிந்தனைகளிலிருந்து அம் மக்களின் தலைவர்கள் எவராகிலும் அதிலிருந்து விடுபடமாட்டார்கள் என்பதற்கப்பால் அவ்வாறு விடுபடாதவர்களாகக் காட்டிக்கொள்வதும் அவர்களது அரசியல் இருப்புக்கு அவசியமானதாக உள்ளது. இதனால் தங்கள் நலனுக்காக அத் தலைவர்கள் உள்ளொன்று வைத்து தமிழர்களிடம் புறமொன்று கூறுவது வழக்கமான ஒன்றுதான் என்பதைச் சில தமிழ்த் தலைவர்கள் அறியாதது போல ஏமாற்றினாலும் தமிழ் மக்கள் நன்கறிவர். இவ்வாறு கடந்த காலம் முழுவதுமே சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு மிகக் கசப்பான அனுபவத்தைப் பெற்றிருக்கும் தமிழ் மக்கள் மீண்டும் ஒருமுறை இவர்களின் வாக்குறுதிகளை எவ்வாறு நம்புவார்கள்?

●

# ஜனாதிபதி தேர்தலும் தமிழர்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் மூவரும் 13 வது திருத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் இன்றைய புதிய சூழ்நிலையை தமிழ் அரசியல் கட்சிகள் எவ்வாறு அணுகப்போகின்றன என்பது முக்கியமான கேள்வி.

13 வது திருத்தம் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்ல என்று கூறும் தமிழ்க் கட்சிகள் நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் முதற்கட்டமாக அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்று அரசாங்கத்தை கோரிவருகின்றன.

அவ்வாறு கோரிக்கையை முன்வைப்பதுடன் தங்கள் பணி முடிவடைந்துவிட்டதாக தமிழ்க்கட்சிகள் நினைக்கமுடியாது. அந்த திருத்தம் தொடர்பில் மாத்திரமல்ல பொதுவில் அதிகாரப் பரவலாக்கம் குறித்தே தப்பபிப்பிராயத்தைக் கொண்டிருக்கும் பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் உள்ள பிரதான அரசியல் சக்திகள் நேர்மறையான ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் சந்தர்ப்பத்தை சாதுரியமாகப் பயன்படுத்தும் அரசியல் விவேகம் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் இருக்கவேண்டியது அவசியம்.

மூன்று பிரதான வேட்பாளர்களும் எடுத்திருக்கும் நிலைப்பாடு 13 வது திருத்தம் தொடர்பில் பெரும்பான்மைச் சமூகம் கொண்டிருக்கும் எதிர்மறையான அபிப்பிராயத்தை ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றுவதற்கு உதவுமேயானால் அது பெரிய காரியமாக இருக்கும்.

ஜனாதிபதி தேர்தலில் இந்த மூன்று வேட்பாளர்களில் எவர் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்தாலும் அவர் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் மற்றைய இருவரும் அதை எதிர்க்கமுடியாமல் போகும். அவர்கள் மூவரிடமும் தமிழ்க் கட்சிகள் அதற்கான உறுதிமொழியை தேர்தலுக்கு முன்னர் பெறுவது விவேகமான ஒரு அணுகுமுறையாக இருக்கும்.

இந்த வேட்பாளர்கள் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையை தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைப்பார்களா? ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கு இணங்குவார்களா? என்றெல்லாம் சில தமிழ்க்கட்சிகள் கேள்வி எழுப்பி அறிக்கைகளை வெளியிடுகின்றன. அவர்களின் அரசியல் விவேகம் குறித்து என்ன கூறுவது என்றே புரியவில்லை.

13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கே தயாரில்லாமல் இருக்கும் கொழும்பு அரசாங்கங்களிடம் சமஷ்டித் தீர்வை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்று முன்னைய ஒரு இலங்கை விஜயத்தின்போது ஜெய்சங்கர் தங்களிடம் கேள்வியெழுப்பியதை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

விடுதலை புலிகள் 13 வது திருத்தத்தை எதிர்த்தார்கள் என்பதற்காக அதை தொடர்ந்தும் எதிர்ப்பது தமிழ்த் தேசியத்துக்கான தங்களின் கடமை என்று நினைக்கின்ற அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள்.

அந்த திருத்தத்தை பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று சில அரசியல்வாதிகளும் சிவில் சமூக முக்கியஸ்தர்களும் பேசுகிறார்கள். அந்த திருத்தத்தை ஒரு தடியினால் கூட தொட்டுப்பார்க்க மாட்டோம் என்று ஒரு காலத்தில் கூறிய மூத்த தமிழ்த் தலைவர் சம்பந்தன் ஐயா அதை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோருவதில் முன்னரங்கத்தில் நிற்பவர்களில் முதன்மையானவராக விளங்குகிறார்.

இந்த கட்டுரையாளர் ஒன்றும் 13 வது திருத்தத்தின் ரசிகர் இல்லை. ஆனால் அந்த திருத்தத்தைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று கூறுபவர்களிடம் ஒரேயொரு கேள்வி.

நாம் விரும்புகின்றோமோ இல்லையோ இன்று இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பரவலாக்க சட்டம் என்றால் அது 13 வது திருத்தம் மாத்திரமே. அதை இலங்கை அரசாங்கம் ஒன்று ஒழித்துவிட்டால் எதிர்காலத்தில் குறைந்த பட்சம் அந்த திருத்தத்தைப் போன்ற ஒன்றை அல்லது அதையும் விட குறைவான ஏற்பாடு ஒன்றையாவது கொண்டுவருவதற்கு அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கக்கூடிய அரசியல் வல்லமை உங்களிடம் இருக்கிறதா?

பயன்தராத பரிசோதனைகளையே மீண்டும் மீண்டும் செய்துபார்த்து வேறுபட்ட விளைவுகளை எதிர்பார்க்கும் ஒரு மக்கள் கூட்டமாக இலங்கை தமிழர்கள் இனிமேலும் இருக்கக்கூடாது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு...

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்தபோது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவாக உரையாடப்பட்டது.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத் தின் கீழ் இந்தப் பகுதிகளில் பெருமளவி லான விவசாய செயல்பாடுகளை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். மட் டக்களப்பு மற்றும் திருகோண மலை யில் அபிவிருத்தி செய்யப்படாத மகா வலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளது.

மேலும், வெருகலாறு முதல் அறுகம் குடா வரையில் சுற்றுலா துறையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டையை தொல் பொருள் திணைக்களத்தின் கீழ் சுற்று லாத் துறைக்காக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர் இந்தப் பிரதேசத்துக்கு ஒரு சிறந்த ஹோட்டல் கிடைக்கும்.

மேலும், இந்தப் பகுதியில் பால் உற் பத்தித் துறையை மேம்படுத்தவும் எதிர் பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பொரு ளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப் பட்ட பின்னர், பெரும் பணிகள் இங்கு செயல்படுத்தப்படவுள்ளன. இதன்படி, திரு கோணமலையை பிர தான ஏற்றுமதி பொருளாதார மையமாக மாற்றமுடியும்.

கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இந்தப் பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். தொழில் கல்வித்துறையின் சீர்திருத்தத் தின் மூலம் அதிகளவான இளைஞர்க ளுக்கு தொழில் பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும். மூன்று, நான்கு ஆண்டுகளாக ஆசிரியர்களை நியமிக்க முடியாததால் பாடசாலை கல்வி மேம்பாட்டுக்காக இன்று ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

நம் நாட்டில் வேலையில்லா திண் டாட்டம் ஒரு பெரும் பிரச்னையாக மாறிவிட்டது. அதற்கேற்ப புதிய அபிவி ருத்தித் திட்டத்தின் மூலம் இளைஞர்க ளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மிகவும் கடினமான நேரத்தை எதிர்கொண்டோம். இந்நாட் டின் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவி ருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம்.

இதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப் படுத்தினோம். இப்போது உங்களுக்கு ஒரு நிலத்தின் சட்டபூர்வ உரிமை உள் ளது. யாரும் அடிபணிந்து வாழத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தி னோம்.

தற்போது விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்கு 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட வுள்ளன. இந்தக் காணி உறுதிப்பத்திரங் களை வினைத்திறனாக வழங்க சம்பந்தப் பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிக ளையும் கிராமங்களுக்கு அனுப்புவதற் கான வேலைத் திட்டத்தையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.

இந்த காணி உறுதிகளை பெறுவதற்கு மக்கள் மாவட்ட செயலகத்துக்கோ அல் லது பிரதேச செயலகத்துக்கோ செல்லத் தேவையில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோ கத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமங்க ளுக்கு சென்று காணி உறுதிகளை மக்க ளுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர் வரும் திங்கட்கிழமை (நாளை) அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவு செய்ய அறிவுறுத்தி யுள்ளேன். எனக்கு ஒரே ஒரு குறிக்கோள் தான் உள்ளது உரிமை மக்களுக்கு வழங் கப்பட வேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட் டுக்கொள்கிறேன்- என்றார். (ஐ)

## 29,595...

வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப் பட்டுள்ளது.

இதேசமயம், உயர்தர தேசிய பொறி யியல் டிப்ளோமா நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்ற 252 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங் கப்பட்டன. (ஐ)

## ஊடகர்களுக்கு...

ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செய லகத்தை திறந்து வைத்த அவர், ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட சீயோன் தேவாலயத்துக்கும் சென்றிருந்தார். அங்கும் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அண்மைக்காலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகா ணத்துக்கும் சென்றிருந்தார். அங்கும் அவரின் நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஊடக வியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

பேரவைக்கு ஜனாதிபதி பரிந்துரை செய்திருந்தார். அவரின் பரிந்துரை நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய சட்ட மா அதிபராக பரீந்த ரணசிங்கவை நியமிக்கு மாறு அரசமைப்பு பேரவைக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரை செய்யவுள்ளார் என்று தெரிய வருகின் றது. மூத்த சட்ட நிபுணரான பரீந்த ரணசிங்க 31 வருடங்கள் சட்டத்துறை யில் அனுபவமுடையவர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## பெரமுனவா...

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து விலகி நிமல் லான்சா அணியுடன் இணைந்து இயங்கும் மூத்த அரசியல் வாதி ஒருவர் கருத்து வெளியிடுகையி லேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் வழி நடத்தல் குழுவுக்கு எமது அணியின் கடும் எதிர்ப்பையும் மீறி பொதுஜன பெரமுனவின் நிறுவநரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ வை தொடர்ந்து அழைத்தால் எதிர் காலத்தில் எமது அணி சுயாதீனமாக இயங்க வேண்டி வரும். நிமல் லான்சா அணியும் நிமால் சிறிபால டி சில்வா அணியும் இணைந்து செயல்படுவதால் எதிர்காலத்தில் கூட்டாக எமது கருத்தை முன்வைப்போம் - என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்தத் தலைவர் கூறினார். (ஐ)

## இனப்பிரச்னை...

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை பணிமனைக்கும் சென்றார். அங்கு பேசிய அவர்,

நாட்டின் வளர்ச்சியடையாத ஏனைய மாகாணங்களை அபிவிருத்தி செய்யத் தேவையான வேலைத்திட்டத்தை நாங்கள் அமுல்படுத்தி வருகின்றோம். திருகோணமலை மாவட்டத்தில் மிகப் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதற்காக இந்தியா மற்றும் ஏனைய வெளிநாடு களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றோம்.

மட்டக்களப்பு விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இந்த சவாலை நாம் ஏற்க வேண்டும். அந்த சவாலை வென்று கிழக்கு மாகா ணத்தை அபிவிருத்தியடைந்த மாகா ணமாக மாற்றுவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

மேலும், இனப் பிரச்னையை இனியும் இழுத்தடிக்க வேண்டிய அவசியமில்லை. அதனை விரைவாக தீர்க்க நாம் அனை வரும் ஒன்றிணைந்து செயல்பட வேண் டும்." என்றார். (ஐ)

# மாத்தளையில் விபத்து தாய், மகள் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 23

மாத்தளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்தனர். தந்தையும் மகனும் படுகாயமடைந்துள் ளனர். பலபத்வல, கிருலுகம பிரதேசத் தில் நேற்று சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

வத்தேகமவிலிருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும் தம்புள்ளையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.



இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த 54 வயது தாயாரும் அவரின் மகளான 17 வயது சிறுமியும் மரணம டைந்தனர். தந்தையும் மகனும் படுகாய மடைந்து மாத்தளை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சீயோன்...

அத்துடன், தேவாலயத்தின் திருத்தப் பணிகளை ஜனாதிபதி பணிமனையின் நிதி ஒதுக்கீட்டில் துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இதன் போது தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

மேலும், புனரமைப்புப் பணிக்கு இராணுவத்தின் ஆதரவை வழங்குமா றும் ஜனாதிபதி இராணுவ தளபதிக்கு பணிப்புரை விடுத்திருந்தார். (ஐ)

## கட்சிக்கு...

தெரிவிக்கவிடாது எதிர்க்கட்சி தடுக்கி றது என்று சரத் பொன்சேகா குற்றஞ் சுமத்தியிருந்தார். அத்துடன், தனக்கு பாராளுமன்றில் பேச நேரம் வழங்க வேண்டாம் என்று லக்ஷ்மன் கிரியெல் லவுக்கு சஜித் பிரேமதாஸ உத்தரவிட் டுள்ளார் என்றும் பொன்சேகா சாடியி ருந்தார்.

இந்த நிலையில் அவரின் குற்றச் சாட்டு தொடர்பில் லக்ஷ்மன் கிரி யெல்ல கருத்து வெளியிடுகையில்,

கட்சித் தலைவர் பேச வேண்டாம் என்று ஒருபோதும் கூறவில்லை. அவர் (சரத் பொன்சேகா) கட்சிக்கு எதிராக வழக்குத் தொடுத்தவர் என்ற வகையில் அவருக்கு நேரம் ஒதுக்குவது பொருத்த மற்றது என்பதை உணர்ந்தே நேரம் ஒதுக்க அனுமதிக்கவில்லை.

சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நீக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. இணையத்தளம் ஒன்றில் வெளியான உண்மைக்குப் புறம்பான தகவலுக்க மைய கட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அவருக்கு நேரம் வழங்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டதாக அவர் கூறி னார். அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று தாம் உரையாற்றினார் என்றும் சரத்பொன்சேகா தெரிவித்தார்" என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல. (ஐ)

## சரத்...

அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவி அவருக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இறுதிப் போரில் வெற்றி கொண்ட போது 4 நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஜெனரல் பதவி வழங்கப்பட்டது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிட்ட அவர் இராணுவ குற்றங்களை இழைத் தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டு சிறை வைக்கப்பட்டார். 2012 இல் விடுதலை செய்யப்பட்டார். 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர், அவருக்கு பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட்டது.

மார்ஷல் பதவியை உலகில் சிலரே வகித்துள்ளனர். இராணுவ ரீதியில் முக்கியத்துவம் பெற்ற நாடுகளின் தலை வர்களும் இந்தப் பதவியை வகித்தனர். அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன், ரஷ்யாவின் முன் னாள் தலைவர் ஜோசப் ஸ்டாலின், சீனா வின் முதல் தலைவர் மாவோ சேதுங் ஆகியோர் மார்ஷல் பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

## தேர்தலில்...

சென்றார். அங்கு நடந்த சந்திப்பிலேயே கட்சியின் தலைவரும் இரா ஜாங்க அமைச்சருமான சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்) தனது ஆதரவு நிலைப் பாட்டை வெளிப்படுத்தினார்.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி னால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று பிள்ளை யான் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

## வெளியக...

ஆணைகளைப் பின்பற்றுவது இந்தக் கோட்பாடுகளை குறைமதிப்புக்கு உட் படுத்துகிறது - மனித உரிமைகள் பிரச் னைகளில் உண்மையான முன்னேற்றத் தைத் தடுக்கிறது என்று ஜெனிவாவுக் கான இலங்கையின் நிரந்தர வதிவிட தூதரகத்தின் ஆலோசகர் டிலினி லென கல தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் அறிக்கை ஒன்றை வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மனித உரிமைகள் பேரவை யின் ஆதாரங்களை சேகரிக்கும் பொறி முறை பயனற்றது. இலங்கையில் சமூகங் களை பிரிக்கவும் - துருவமயப்படுத்த வும் மாத்திரமே அது உதவும்.

மேலும், இந்த பொறிமுறையால் குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவு மில்லை. உள்நாட்டு பொறிமுறை குறித்த அர்ப்பணிப்பை இது முன் கூட்டியே தீர்மானம் செய்கின்றது - உறுப்புநாடுகளின் வளங்களை வீணடிக்கின்றது. உலகெங்கிலும் உள்ள சவாலான மனித உரிமைகள் சூழ்நிலை களை பாரபட்சமற்றவிதத்தில், தேர்ந் தெடுக்கப்படாத தன்மையுடன் புறநிலை யுடன் இரட்டை நிலைப்பாடுகளை தவிர்த்து மதிப்பிடவேண்டும்.

இந்த கோட்பாடுகளுக்கு முரணான தன்னிச்சையான செயல்பாடுகளை இலங்கை கடுமையாக எதிர்க்கின்றது. மேலும், ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு உறுப்பு நாடுகள் வழங்கிய ஆணைக்கு முரணா னது. இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணி மனையை அரசியல் மயப்படுத்தி அதன் மீதான நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்ப டுத்தலாம்.

மனித உரிமைகள் பேரவையின் பணியானது இறையாண்மை - சமத்து வம் - பிரதேச ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்தல் - தலையீடு செய்யாமை போன்ற கோட்பாடுகளால் வழிநடத் தப்பட வேண்டும். ஒருதலைப் பட்ச மான ஆணைகளைப் பின்பற்றுவது இந்தக் கோட்பாடுகளை குறைமதிப் புக்கு உட்படுத்துகிறது - மனித உரிமை கள் பிரச்னைகளில் உண்மையான முன்னேற்றத்தைத் தடுக்கிறது - என்றும் லெனகல கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அம்பாறை ஊடக மன்றம் இன்று அங்குரார்ப்பணம்!

நிந்தவூர், ஜூன் 23

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், பிரதேச ஊடகவியலாளர்களுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஊடக மன்றம் அம்பாறை மாவட்டத்திலும் நிறுவப்படவுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்துக்கான ஊடக மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறையில் நடைபெறவுள்ளது.

அம்பாறை நகரிலுள்ள மொண்டி விருந்தினர் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இந்த நிகழ்வு நடைபெறும்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, மற்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார ஆகியோர் தலைமையில் ஊடக மன்றம் நிறுவப்படும். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இவ்வாறான ஊடக மன்றங்களை நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நிறுவும் நடவடிக்கைகளை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக பிரசார மற்றும் மக்கள் தொடர்பு பிரிவு முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-06)

# ஜனாதிபதித் தேர்தல் உரியநேரத்தில் நடக்கும்

## ராஜிதவிடம் உறுதியளித்தாராம் ரணில்



கொழும்பு, ஜூன் 23

**“உரிய வகையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், சர்வசன வாக்கெடுப்பு மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் தன்னிடம் இல்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் உறுதியாகக் கூறினார்.” - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவினேன். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எவ்வித திட்டமும் இல்லை என்றும் தேர்தல் உரிய வகையில் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அடுத்தது ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிப்பு பற்றியும் தகவல்கள் வெளியாகின. அது பற்றியும் வினவினேன். அவ்வாறு எவ்வித திட்டம் இல்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெற்றியோ, தோல்வியோ நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் பெரும்பாலானவர்கள் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை.” - என்றார். (ஐ)

வீரமாகாளி அம்மன் ஆலய குழப்பம்

# விசாரணைக்கு செல்லாத மூன்று பேர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் கோயில் நிர்வாகப் பிரச்னை தொடர்பாக விசாரணைக்கு சமுகமளிக்காத மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் நிர்வாகத்தில் அடிக்கடி முரண்பாடுகள் - மோதல்கள் ஏற்படுகின்றன. கோயில் பூசகரின் சகோதரன், மகன், சிறிய தந்தை ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பான முறைப்பாட்டை அடுத்து விசாரணைக்கு பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டனர். விசாரணைக்கு அவர்கள் சமுகமளிக்காத நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# யாழ். போதனா மருத்துவமனையில் 125 பேருக்கு கண்புரை சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 23

பொசன் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 125 இற்கும் மேற்பட்டவர்களுக்கு கண்புரை சிகிச்சையளிக்கப்பட்டது.

அலைக்கா மற்றும் ஆனந்தா பௌண் டேஷனின் பங்களிப்புடன் 51 இராணுவப் படைப்பிரிவின் உதவியுடன் கண் நோயாளர்களுக்கான சிகிச்சை மருத்துவர் மலரவனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணம் நாகவிகாரை விகாராதிபதி தலைமையில் பொசன் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்திய மூர்த்தி, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், மற்றும் யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# 13ஆவது நாளாக தொடர்ந்த சத்தியாக்கிரக போராட்டம்

கொழும்பு, ஜூன் 23

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சத்தியாக்கிரக போராட்டம் 13ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக அவர்கள் தொடர்ச்சியான சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தங்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியே அவர்கள் இவ்வாறு தொடர்ச்சியான சத்தியாக்கிரக போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மிருகங்களுக்கு உணவு தானம்

மன்னார், ஜூன் 23

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மன்னாரில் கட்டாக்காலி மிருகங்களுக்கு உணவு தானம் வழங்கப்பட்டுள்ளது. மன்னாரில் நாய்கள், கழுதைகள், குரங்குகள், பூனைகள் மற்றும் காகங்களுக்கு மரக்கறிகள், சோறு என்பன வழங்கப்பட்டன.

விலங்குகள் மனிதநேய முகாமைத்துவ சங்கத்துடன் வெட் ஒப் பியுச்சர், வன் மீல், மில்லியன் வைவ்ஸ், பிரிட் ஜிங் லங்கா மற்றும் ஹெண்ட்ரோ அனிமல் ரெஸ்க்யூ ஆகிய அமைப்புகள் இணைந்து இவ்வாறு தானம் வழங்கும் நிகழ்வை நடத்தின. (எ)

# திரிபோசா வழங்காதமையால் ஊட்டச்சத்து குறைபாடு உயர்வு

கொழும்பு, ஜூன் 23

திரிபோசா வழங்கப்படாமையினால் 6 மாதங்கள் முதல் 3 வயது வரையான குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவ சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அதன் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

6 மாதங்களுக்கும் அதிகமான 3 வயதிற்கு குறைவான குழந்தைகளுக்கு திரிபோசா வழங்குமாறு பல கோரிக்கைகளை முன்வைத்தோம். இந்த வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளே அதிகமாக போசணை குறைபாட்டுக்கு உள்ளாகி வருகின்றனர் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# நண்பன் வீட்டில் கைவரிசை காட்டிய இருவர் கைதாகினர்

கிளிநொச்சி, ஜூன் 23

நண்பனின் வீட்டில் களவாடிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், களவு போன சுமார் 9 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் பொலிஸார் மீட்டனர்.

கிளிநொச்சி - உதயநகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உதயநகர் மேற்கிலுள்ள வீட்டுக்கு உரிமையாளரின் மகனுடன் நண்பர்கள் இருவர் அடிக்கடி வருவது வழமையாக இருந்தது. கடந்த 16ஆம் திகதி அன்று வீட்டு உரிமையாளர்கள், வீட்டில் வைத்த நகையை தேடிய போது நகை காணாமல் போனமை தெரிய வந்தது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் செய்தார்.

விசாரணை நடத்திய பொலிஸார் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவரை கைது செய்தனர். அவர்கள் இருவரும் ஏற்கனவே பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 23

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதுண்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளையிலிருந்து எட்டம்பிட்டி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றவரே இவ்வாறு விபத்துக்கு உள்ளானார். படுகாயமடைந்த அவர் உடனடியாக பண்டாரவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அங்கு சேர்ப்பித்த சிறிது நேரத்திலேயே அவர் உயிரிழந்து விட்டார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பண்டாரவளையை சேர்ந்த 59 வயது நபர் என்று தெரிய வந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கல்முனையில் கைது!

கல்முனை, ஜூன் 23

ஐஸ் ரக போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 9 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பை சேர்ந்த 47 வயதுடையவரே இவ்வாறு கைதானார். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.